Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
WEDNESDAY, JULY 14, 2021

புதன்கிழமை ஜூலை 14, 2021 | ஒளி: 07கதிர் 47 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

# 18 வயதுக்கு கீழும் தடுப்பூசிக்கு வாய்ப்பு

30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவது குறித்தும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



தொடர்ச்சி P2

# தனிமைக்குப் பின்னர் பி.ரி.ஐ இன் கீழ் கைது

■ செ.கீதாஞ்சன்



முல்லைத்தீவு மாவட்டப் படையினரின் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்தில் இருந்து தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த நபர் ஒருவர், பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரினரால், நேற்று (13) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை - இருதயபுரம் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் (பி.ரி.ஐ) கீழே இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2019ஆம் ஆண்டில், திருகோணமலை - மூதூர் பகுதியில் வெடிபொருளுடன் கைதான இருவர் வழங்கிய தகவலின் அடிப்படையில், இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## 4/21 அறிக்கையில் குறைப்பாடு:

# ‘ஆழமான விசாரணை வேண்டும்’



## ஜனாதிபதியிடமும் அறிக்கை கையளிப்பு

**திணைக்களங்கள் நினைத்தால் அது தன்னைத் தானே ஏமாற்றிக்கொள்ளும் செயலாகும்**

**ஆட்சியாளருக்கு தெளிவு ஏற்படும் வரை நெருப்பின் மேல் இருக்கும் மக்களாகவே இருப்போம்**

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஆணைக்குழு அறிக்கையில் உள்ள குறைப்பாடுகளை சுட்டிக்காட்டி, 7 ஆயர்களால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கை, நேற்று (13) ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளதென தெரிவித்த பேராயர் ரஞ்சித் மெல்கம் ஆண்டகை, அனைத்து விடயங்களையும் ஆராய்ந்தே இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

# பொம்மைக்குள் விளையாட்டு ‘குடு நோனி’ வசமாக சிக்கினார்

தபால் பொதி சேவை ஊடாக போதைப்பொருள்களைக் கடத்திய, கொம்பனி வீதியைச் சேர்ந்த ‘குடு நோனி’ என்றழைக்கப்படும் பெண், கைது செய்யப்பட்டுள்ளார்.





தொடர்ச்சி P2

# பச்சிளம் சிசுவை கொன்று கொளுத்திய தாய் கைது

## 4 வருடங்களுக்கு முன்னர் கணவர் பறந்துவிட்டார்

■ எப்.முபாரக்



திருகோணமலை, கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பிறந்தவுடனேயே சிசுவொன்றை கொலை செய்து எரித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அச்சிசுவின் தாயொருவர் , நேற்று முன்தினம் (12) மாலை கந்தளாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்ரஸாநகர் பேராறு கந்தளாய் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு கைது செய்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண்ணின் கணவர், வெளிநாடு சென்று நான்கு வருடங்களாகிறது என விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது எனத் தெரிவித்த கந்தளாய் பொலிஸார், இந்நிலையிலேயே அப்பெண், சிசுவைப் பிரசவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# நிர்வாணப் படங்களை பதிவேற்றிய ஐவர் கைது

ஆபாச புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையத்தளங்களில் பதிவேற்றிய ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

தற்காலத்தில் சமூகவலைத்தளங்களில் இவ்வாறான குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கணினி குற்றங்கள் தொடர்பான பொலிஸ் விசாரணை பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுவரும் கண்காணிப்பு நடவடிக்கைகளை அடுத்தே, இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## துஷ்பிரயோக விவகாரம்:

# சாட்சிகளை ஒளிப்பதிவதற்கு 9 அலகுகளை நிறுவ அனுமதி



பல்வேறு வகையில் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிய பிள்ளைகளால் வழங்கப்படும் குறித்த சம்பவங்களுக்குரிய சாட்சிகளை ஒளிப்பதிவு செய்வதற்காக, ஒன்பது மாகாணங்களை உள்ளடக்கிய, அலகுகளை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் அளித்துள்ளது.

மருத்துவமனை சார்ந்த சாட்சியங்களை ஒளிப்பதிவு செய்யும் வகையிலேயே இந்த அலகுகளும் நிறுவப்படவுள்ளன. கல்வியமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கே அங்கிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ‘பரீட்சைகள் தொடர்பில் செவ்வாய் இறுதி முடிவு’



ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை, கல்விப் பொதுத்தராதர உயர் தரப் பரீட்சை ஆகிய பரீட்சைகள் தொடர்பில், எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இறுதி செய்யப்படும் எனத் தெரிவித்த கல்வியமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், நிகழ்நிலை முறைமை ஊடான கல்வி வகுப்பறை கல்விக்கு நிகராக அமையாது என்றார்.

“இவ்விரு பரீட்சைகளையும் ஒக்டோபர் மாதம் நடத்துவதற்கு ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டது. எனினும், பாடவிதானங்கள் தொடர்பிலான விமர்சனங்களால், அத்திகதிகள் இறுதி செய்யப்படவில்லை. ஆகையால், செவ்வாயன்றே இறுதி செய்யப்படும்” என்றார்.

தொடர்ச்சி P2

# ‘தவறானவைக்கு எதிராக தெளிவான ஒழுங்குபடுத்தல் தேவையாகும்’

■ மகேஸ்வரி விஜயனந்தன்



தவறான செய்திகளைப் பரப்பும் வலைத்தளங்கள் குறித்து தெளிவான ஒழுங்குபடுத்தல்கள் தேவையெனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல, 15 வயதுச் சிறுமி துஷ்பிரயோகம் தொடர்பான விடயத்தில் சட்டம் முறையாக அமுல்படுத்தப்படும். குற்றம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களின் சமூக நிலையைப் பொருட்படுத்தாமல் சட்டத்தை முறையாக அமல்படுத்த வேண்டும்என்றார்.

தொடர்ச்சி P2

# ‘3ஆவது டோஸ் அவசியமில்லை’



‘3வது டோஸ் கொவிட் தடுப்பூசி இப்போது அவசியம் இல்லையெனத் தெரிவித்துள்ள உலக சுகாதார அமைப்பு, தற்போதிருக்கும் கொவிட் தடுப்பூசிகளை ஏழை நாடுகளுக்கு வழங்க வேண்டும்’ எனக் கேட்டுக்கொண்டுள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் சில மருந்துத் தயாரிப்பு நிறுவனங்கள், தமது 3ஆவது டோஸ் கொவிட் தடுப்பூசிக்கு அங்கிகாரம் கோரி விண்ணப்பித்து உள்ளன.


இது குறித்து உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம், மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## நீராவியடி கோவில்

# பொங்கல் உற்சவம் ஆரம்பம்

■ சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு - பழைய செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் கோவில் வருடாந்த பொங்கல் உற்சவம், நேற்று (13) காலை ஆரம்பமானது.

அதிகாலை 3 மணியளவில், கோட்டைக்கேணி பிள்ளையார் கோவிலில் இருந்து மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு, உற்சவம் ஆரம்பமானது.

இந்நிலையில் கோவில் வளாகத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 09ஆம் திகதியன்று, பிரதேச செயலகத்தால் 10 பேர் மாத்திரமே, இந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## தேர்தல் முன்மொழிவுகளை சமர்ப்பித்தல்:

# அவகாசம் நாளை நிறைவு இன்று சமர்ப்பிக்கிறது ப:.:வ்ரல்

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் மறுசீரமைப்புக் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட பாராளுமன்றக் குழு முன்னிலையில் இன்று (14) ஆஜராகுமாறு, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (பஃவ்ரல்) அமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

PAFFREL

தொடர்ச்சி P2

# ‘நிகழ்நிலை விலகல் படு மோசமான செயல்’

■ மகேஸ்வரி விஜயனந்தன்

நிகழ்நிலை கற்பித்தலில் இருந்து ஆசிரியர்கள் விலகியுள்ளமை படுமோசமான செயற்பாடாகவே கருத வேண்டுமெனத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான கெஹெலிய ரம்புக்வெல, “இவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு 43 இலட்சம் மாணவர்களை பகடையாக வைப்பது எந்தளவுக்கு நியாயமாகும் என்பதை நாட்டு மக்கள் தீர்மானிக்க வேண்டும்” என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 18 வயதுக்கு கீழும் தடுப்பூசிக்கு வாய்ப்பு

"இதேவேளை, 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவது தொடர்பாக இதுவரை தங்களுக்கு எந்தப் பரிந்துரைகளும் கிடைக்கவில்லை" என திறன்கள் அபிவிருத்தி, தொழில்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமான தெரிவித்தார்.

"எவ்வாறாயினும், சினோர்ஃபாம் மற்றும் ஃபைசர் தடுப்பூசிகள் சில நாடுகளில் பாடசாலை மாணவர்களுக்கு வழக்கப்பட்டு வருவதால், இது தொடர்பாக தற்போது கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன" என்று அவர் குறிப்பிட்டார்.

"12 வயது முதல் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு, கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறு, ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 19 வயது தொடக்கம் 29 வயதுக்குட்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றுவது குறித்து அதிகாரிகள் இதுவரை எந்த அறிக்கையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சாட்சிகளை ஒளிப்பதிவதற்கு 9 அலகுகளை நிறுவ அனுமதி

பாதிக்கப்பட்ட பிள்ளையொருவர் நீதிமன்றத்தில், திறந்த அரங்கில் சாட்சி வழங்கும் போது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுவதால், குறித்த சாட்சிகள், ஒளிப்பதிவு செய்து பெற்றுக்கொண்டு சமர்ப்பிப்பதற்கும் இதனூடாக அனுமதி கோரப்பட்டுள்ளது.

அது, சாட்சியங்கள் (விசேட ஏற்பாடு) சட்டத்தின் மூலம் இலங்கையின் நீதித்துறைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அந்த அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் காணொளிப்பதிவு செய்யும் அலகொன்றை ஸ்தாபித்து சாட்சிகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் தற்போது கொழும்பில் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது.

# 'பரீட்சைகள் தொடர்பில் செவ்வாய் இறுதி முடிவு'

ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கொவிட் தொற்றால், மூடப்பட்டுள்ள பாடசாலைகளை விரைவாக திறக்க எதிர்பார்த்துள்ளோம். நிகழ்நிலை முறைமை ஊடான கல்வி வகுப்பறை கல்விக்கு நிகராக அமையாது. தொலை நோக்கு கல்வி முறைமை பிரச்சினைகளுக்கு தற்காலிகத் தீர்வாகும்" என்றார்.

"பாடசாலைகளை திறப்பதற்கான முதற்கட்டமாக, ஆசிரியர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை, நேற்று முன்தினம் ஆரம்பமானது எனத் தெரிவித்த அவர், தடுப்பூசி செலுத்தும் பணிகள் கொழும்பு மாவட்டத்தில் 97 சதவீதமும், கம்பஹா மாவட்டத்தில் 81 சதவீதமும், களுத்துறை மாவட்டத்தில் 82 சதவீதமும் முழுமை பெற்றுள்ளன" என்றார்.

நாடு தழுவிய ரீதியில் ஆசிரியர்களுக்கு கொவிட்-19 தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்னும் 10 நாள்களுக்குள் நிறைவு பெறும். நான்கு வார காலத்துக்குப் பிறகு இரண்டாம்கட்ட தடுப்பூசியை வழங்க எதிர்பார்த்துள்ளோம். அத்துடன் பாடசாலை வெளிகள ஊழியர்களுக்கும் கொவிட்-19 தடுப்பூசி வழங்கப்படும். என்றார்.

# 'ஆழமான விசாரணை வேண்டும்'

"எம்மைப் பொறுத்தவரை இது தொடர்பான விசாரணைகளில் இன்னும் வேகம் தேவைப்படுகின்றது" என்றார்.

கொழும்பில், நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், இந்த விசாரணையை அரசாங்கம் விரைவுப்படுத்த வேண்டும். ஓரிருவரைக் கைதுசெய்து, நீதிமன்றுக்கு அழைத்து வந்து, இந்த விசாரணைகள் முடிவுற்றதாகக் கூறி அதனை காபட்டுக்கு அடியில் போடும் செயலை செய்ய வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார்.

"இவ்வாறான செயற்பாடுகளால் மக்களை திருப்திபடுத்த முடியாது. அவ்வாறுதிருப்திபடுத்தஅரசாங்கமோ அல்லது விசாரணைகளை முன்னெடுக்கும் திணைக்களங்களோ நினைத்தால் அது தன்னைத் தானோ ஏமாற்றிக்கொள்ளும் செயலாகும்" என்றார்.

தாக்குதல் தொடர்பான நிலைமை நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் தடையாக இருந்ததாக நாம் கருதியதால், இது குறித்து அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கூறினோம். இந்த விசாரணைகளை இன்று வரையிலும் திருப்திப்படுத்தும் வகையில் நடக்கிறது என அக்கட்சிகளின் தலைவர்களால் கூறமுடியாது எனத் தெரிவித்த அவர், எனவே, நாம் இந்தப் போராட்டத்தை இத்துடன் முடிக்கப் போவதில்லை என்றார்.

இந்த நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள சான்றிதழ்களால் எவ்விதப் பயனுமில்லை எனத் தெரிவித்த அவர், இந்நாட்டில் கண்முன்னே தெரிவதை விட கண்ணுக்குத் தெரியாமல் நடக்கும் விடயங்கள் குறித்து சரியான தெளிவு நாட்டின் தலைவர் மற்றும் நாட்டை ஆட்சி செய்பவர்களுக்கு ஏற்படும் வரை நாம் நெருப்பின் மேல் இருக்கும் மக்களாகவே இருப்போம்.

"இந்தச் சம்பவத்தின் பின்னால் மறைந்துள்ள இரகசிய விடயங்கள் என்னவென்று விசாரணை செய்ய வேண்டும்" என்றார்.

தற்போது அரசியல் தலைமைத்துவத்துக்கு ஏற்றவகையில் செயற்படும் பொலிஸாரும் அரசியல் தலைமைத்துவ நிகழ்ச்சி நிரலுக்கமைய செயற்படும் குற்ற விசாரணை திணைக்களமும் அரசியல் தலைமைத்துவத்தில் தலையிட்டு கட்டுபடுத்த முயற்சிக்கும் சட்ட கட்டமைப்பும் சட்டத்தை செயற்படுத்துபவர்களும் இந்தச் சம்பவத்தின் பின்னணி குறித்து ஆராய வேண்டும். எதிர்கால பாதுகாப்பை கவனத்தில் எடுத்து, ஆழமான விசாரணை நடத்த வேண்டும் என்றார்.

# '3ஆவது டோஸ் அவசியமில்லை'

கொவிட் தொற்றுக்கு 3ஆவது டோஸ் தடுப்பூசி செலுத்துவதற்கு அனுமதி அளிப்பதற்கு போதிய அறிவியல்பூர்வ ஆதாரமும், தரவுகளும் இல்லை. அதற்குப் பதிலாக பணக்கார நாடுகள் தங்களிடம் மீதமுள்ள தடுப்பூசிகளை ஏழை நாடுகளுக்குப் பகிர்ந்தளிக்க முன்வர வேண்டும்.

உலகளவில் கொவிட் இறப்புகள் 10 வாரங்களாகக் குறைந்திருந்த நிலையில், டெல்டா வகை தொற்றுகளால் உயிரிழப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. எனவே, தடுப்பூசி தயாரிப்பு நிறுவனங்கள் ஐ.நா.,வின் கோவாக்ஸ் திட்டத்துக்கு தடுப்பூசிகளை வழங்க வேண்டும் என்றார்.

உலக சுகாதார அமைப்பின் அவசரகாலப் பிரிவின் தலைவர் மைக்கேல் ரியான் கூறுகையில், "பணக்கார நாடுகள் தடுப்பூசிகளை ஏழை நாடுகளுக்கு வழங்காமல், 3ஆவது டோஸாக செலுத்த முடிவு செய்யுமானால், அதற்காக நாம் வெட்கப்பட வேண்டும். ஏழை நாடுகளுக்கு தடுப்பூசிகளை வழங்க பணக்கார நாடுகள் மறுப்பது ஏமாற்றம் அளிக்கிறது" என்றார்.

# நிர்வாணப் படங்களை பதிவேற்றிய ஐவர் கைது

இதற்கமைவாக, 26 வயதுடைய இளைஞன் ஒருவர், புறக்கோட்டை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன், ராஜகிரிய பகுதியிலும் நிர்வாண புகைப்படங்களை பதிவேற்றிய குற்றச்சாட்டில் 26 வயதுயை மற்றுமொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் 23 வயதுடைய இளைஞன் ஒருவர், கண்டி – பூஜாப்பிட்டிய பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், இவ்வாறான நிர்வாண புகைப்படங்களை பதிவேற்றி 39 வயதுடைய நபர் பிலியந்தலையில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 31 வயதுடைய நபர் கம்பஹா பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று மற்றுமொருவரின் பேஸ்புக் கணக்குக்குள் மோசடியாக நுழைந்து ஆபாச படங்களை ஏற்றிய 31 வயதுடைய நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் அனைவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், சமூக வலைத்தளங்கள் மற்றும் இணையத்தளங்கள் குறித்து கண்காணிப்புத் தொடர்வதாகவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# பச்சிளம் சிசுவை கொன்று கொளுத்திய தாய் கைது

அச்சிசு, ஞாயிற்றுக்கிழமை (11) இரவு பிறந்துள்ளது. அதன் பின்னர், அச்சிசுவை கொலை செய்து எரித்துள்ளார்.

அதன் பாகங்களை, கௌவ்விய தெருநாய்கள் தெருத்தெருவாக இழுத்துச் சென்றுள்ளன. இதனைக் கண்ட அயலவர்கள் வழங்கிய தகவலையடுத்து பொலிஸார், சிசுவை பிரசவித்ததாகக் கூறப்படும் பெண்ணை சந்தேகத்தின் பேரில் கைது செய்து, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தனிமைக்குப் பின்னர் பி.ரி.ஐ இன் கீழ் கைது

அதாவது, குறித்த நபர் கட்டாரில் வசித்து வந்த நிலையில், கடந்த 14 நாள்களுக்கு முன்னர் கட்டாரில் இருந்து நாடு திருப்பினார்.

இவ்வாறு நாடு திரும்பிய குறித்த நபர், தனிமைப்படுத்தலுக்காக முல்லைத்தீவு மாவட்டப் படையினரின் தனிமைப்படுத்தல் கண்காணிப்பு நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டார்.

இந்நிலையில், நேற்றுடன், அவரது 14 நாள்கள் தனிமைப்படுத்தல் நிறைவடைந்ததை அடுத்து, வவுனியாவில் இருந்து வருகை தந்த பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினர், அவரை விசாரணைக்காக கைதுசெய்துள்ளனர்.

# 'தவறானவைக்கு எதிராக தெளிவான ஒழுங்குபடுத்தல் தேவையாகும்'

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (13) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

"இது போன்ற சம்பவங்கள் குடும்பங்களை அழிக்கக்கூடும், மக்களின் சுயமரியாதையையும் கூட சேதப்படுத்தும் என்பதால் இந்த நாட்டின் மக்களின் சுயமரியாதையைப் பாதுகாக்க இதுபோன்ற தவறான செய்தி வலைத்தளங்களை கண்டறிந்து ஒழுங்குபடுத்த வேண்டும் "என்றார்.

"அனைத்து ஊடகங்களும் பொதுச் சொத்துகளே அன்றி, தனியார் சொத்து அல்ல என்றும், ஏதேனும் சிக்கல் காணப்படுமாயின் அவற்றைத் தீர்க்க சட்ட ஆலோசனைகள் பெறப்பட்டு, சட்டவரையறைக்குள் செயற்படுத்தப்படும்" என்றார்.

பொதுமக்களின் சொத்துகளைப் பயன்படுத்தி, நாட்டின் அமைதியை இல்லாமல் செய்யப்படுமாயின், இனங்களுக்கிடையில் வேற்றுமை ஏற்படும் வகையில் செயற்படுவார்களாயின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்டவரையறைக்குள் செயற்பட ஊடகத்துறை அமைச்சர் என்ற ரீதியில் தான், பின் நிற்கப் போவதில்லை என்றும் அவ்வாறு செயற்படுவது தமது பொறுப்பு மற்றும் கடமையாகும் என்றார்.

# 'நிகழ்நிலை விலகல் படு மோசமான செயல்'

"தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினர் என்றக் குற்றச்சாட்டின் கீழே, இவர்கள் தனிமைப்படுத்த ப்பட்டுள்ளனர்" என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தால் கல்வித் துறை பாரிய சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளது என்று தெரிவித்த அவர், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்த பிரத்தியேக தொலைக்காட்சி அலைவரிசைகளை உருவாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார்.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவலை பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த வாரம் பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் இலங்கை ஆசிரிய சங்கத்தினரும், தொழிற்சங்கத்தினரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டார்கள். கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை கருத்திற்கொண்டு போராட்டங்கள் மற்றும் ஒன்றுகூடலுக்கு மறு அறிவித்தல் விடுக்கும் வரையில் தடை விதிக்கப்பட்டுள்ளன.

அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியே ஆர்ப்பாட்டத்தில் இவர்கள் ஈடுப்பட்டார்கள். இதன் காரணமாக கைது செய்யப்பட்டு தற்போது தனிமைப்படுத்த ப்பட்டுள்ளார்கள். தனிமைப்படுத்தல் தொடர்பிலான தீர்மானத்தை அரசாங்கம் எடுக்கவில்லை. சுகாதாரத் தரப்பினரது பரிந்துரைகளுக்கு அமையவே அவர்கள் தனிமைப்படுத்த ப்பட்டுள்ளார்கள். இதில் எவ்வித அரசியல் நோக்கங்களும் தலையீடுகளும் இல்லை என்றார்.

தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக கருதினால் உரிய சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம். அதற்கான பல வழிமுறைகள் காணப்படுகின்றன. இவர்களுக்கு ஆதரவாக, 'நிகழ்நிலை' முறைமையிலான கற்பித்தல் நடவடிக்கையில் இருந்து ஆசிரியர்கள் விலகியுள்ளமை முற்றிலும் தவறான செயற்பாடாகும் என்றார்.

# பொங்கல் உற்சவம் ஆரம்பம்

இருப்பினும், தற்போது நாட்டில் 150 பேர் வரை நிகழ்வுகளில் பங்குபற்ற அனுமதி இருப்பினும், சுகாதார விதிமுறைகளை பின்பற்றி, மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களோடு கோவில் உற்சவம் ஆரம்பமாகியுள்ளது.

# பொம்மைக்குள் விளையாட்டு 'குடு நோனி' வசமாக சிக்கினார்

"கொழும்பு பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்துக்கு, இன்றைக்கு மூன்று நாள்களுக்கு முன்னர் கிடைத்த தகவலுக்கு அமைய, சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டது" என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

அநுராதபுரத்திலுள்ள ஒருவருக்கு பொம்மையொன்றுக்குள் ஹெரோய்ன் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டு, அனுப்பப்பட்டமை தொடர்பில் தகவல் கிடைத்ததையடுத்து, போதைப்பொருள் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு – கொம்பனித்தெரு பகுதியிலுள்ள 49 வயதான 'குடு நோனி' என்றழைக்கப்பட்ட பெண்ணால் இந்தப் போதைப்பொருள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அப்பெண்ணுக்கு கடுவலை பகுதியிலும் வீடொன்று உள்ளது. அந்த வீட்டிலிருந்து 56 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, பொதி சேவையூடாக அனுப்பப்பட்ட பொதியை, அநுராதபுரத்தில் பெற்றுக்கொண்ட நபரும் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள், கடுவலை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர், தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# அவகாசம் நாளை நிறைவு; இன்று சமர்ப்பிக்கிறது பஃவ்ரல்

சபை முதல்வரும் வெளிநாட்டு அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவின் தலைமையிலான இந்த விசேட குழு, இன்று (14) முற்பகல் பாராளுமன்றத்தில் கூடவிருக்கிறது.

"அதேநேரம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைப்பது தொடர்பில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன முன்வைத்த யோசனைக்கும் விசேட குழுவின் அனுமதி கிடைத்திருக்கிறது" என இக்குழுவின் செயலாளரும், பாராளுமன்ற பணியாட் தொகுதியின் பிரதானியும், பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானீ ரோஹனதீர தெரிவித்தார்.

அத்துடன், இக்குழுவின் சகல கூட்டங்களின்போதும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாட்டாளர்களை பங்கெடுக்கச் செய்யுமாறும் தலைவர் அறிவுறுத்தியுள்ளார் என ரோஹனதீர குறிப்பிட்டார்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் மறுசீரமைப்புக் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட விசேட பாராளுமன்றக் குழுவுக்கு அரசியல் கட்சிகளின் முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம், நாளை 15ஆம் திகதியுடன் பூர்த்தியடைகிறது.

## CABINET DECISIONS
அமைச்சரவை முடிவு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று முன்தினம் (12) நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில.

### புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திட அனுமதி

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்துக்கும் சீனாவின் செங்டு விவசாயக் கல்லூரிக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ள கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கல்வி மற்றும் விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகள் தொடர்பான தரவுகள் மற்றும் தகவல்கள் பரிமாற்றம், பணிக்குழாம் மற்றும் மாணவர் பரிமாற்றம், ஒருங்கிணைந்த பாடவிதான அபிவிருத்தி உள்ளிட்ட உற்பத்தி போன்ற துறைகளிலேயே ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் ஜப்பான் மெய்ஜோ பல்கலைக்கழகத்துக்கும் இடையில் உயர்க்கல்வி ஒத்துழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ள கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஒருங்கிணைந்த கற்றல்கள் மற்றும் விஞ்ஞான ரீதியான செயற்பாடுகள் தொடர்பான விரிவுரைகள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளை ஒழுங்குபடுத்தல் போன்ற நோக்கங்களை உள்ளடக்கியதாக இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொள்ளப்படவுள்ளது.

### இலத்திரனியல் வாகனப் பாவனையை அதிகரித்தல்

இலங்கையின் வாயு மாசடைதலில் 60 சதவீதமானவை மோட்டார் வாகனங்களால் இடம்பெறுவதாக மொரட்டுவை பல்கலைக்கழகம் மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால் இலத்திரனியல் வாகனப் பாவனையை ஊக்குவிப்பதற்கான மூலோபாயத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### ஐ.நா சமவாயத்துக்கு சமர்ப்பித்தல்

பிரதான 14 துறைகளின் பங்காளி நிறுவனங்களின் பங்குபற்றலுடன் அரசாங்கத்தின் சமகாலக் கொள்கைகளுக்கமைய மீண்டும் மேம்படுத்தப்பட்டுள்ள 'தேசிய ரீதியில் நிச்சயிக்கப்பட்ட பங்களிப்புக்கள்' ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான சட்டகப்படுத்தப்பட்ட சமவாயத்துக்கு சமர்ப்பிப்பதற்கும், குறித்த பங்களிப்புக்கள் வினைத்திறனாகவும் பயனுள்ள வகையிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றமை தொடர்பாக கண்காணிப்பதற்கான நடவடிக்கைக் குழுவொன்றை அமைப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### இலங்கைக்கான டிஜிட்டல் விசா

டிஜிட்டல் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுப்பதற்காக இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தால் வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கும், டிஜிட்டல் சுற்றுலாப் பயணிகளுக்கு நீண்டகால (ஒரு வருடம் வரை) வீசா அனுமதிப்பத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்காகவும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### இலங்கை- ரஷ்யாவுக்கு இடையில் ஒப்பந்தம்

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் விளையாட்டுத்துறையில் பங்களிப்புக்களை பலப்படுத்துவதற்காக இருதரப்புப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கு யோசனை முன்வைக்கப்படுள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### நீர்வளச் சபைச் சட்டத்தில் திருத்தம்

நீர்வளச் சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அது தொடர்பான குற்றங்கள் மற்றும் அவற்றுக்கான தண்டனைகளை விதிப்பதற்குப் போதுமான ஏற்பாடுகள் நீர்வளச் சபைச் சட்டத்தில் காணப்படாமை கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பில் தற்போது எதிர்கொள்ள நேரிட்டுள்ள ஏனைய சவால்களுக்கும் தேவையான சட்ட ஏற்பாடுகளை தயாரிப்பதற்காக பொருத்தமான சட்ட ரீதியான ஏற்பாடுகளைக் குறித்த சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்துவதற்காக நீர் வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### நிதி நிலைமை அறிக்கையை சமர்ப்பிக்க அங்கிகாரம்

2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள 2021 ஆம் ஆண்டின் நடுப்பகுதிக்கான நிதி நிலைமை தொடர்பான அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையினால் அங்கிகாரம் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் நிதியமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### உர தயாரிப்பதை ஊக்குவித்தல்

சேதன உரத்தைத் தயாரிக்கும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக சேதன உரத்தைத் தயாரித்து தமது விவசாய நிலங்களுக்குப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு ஹெக்டேயர் ஒன்றுக்கு 12,500 ரூபாய் வீதம் உயர்ந்தபட்சம் 02 ஹெக்டேயர்களுக்கு (05 ஏக்கர்கள்) அதிகரிக்காமல் ஊக்குவிப்புக் கொடுப்பனவை செலுத்துவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

கமத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

---

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களின்

# 'உரிமைகளை பாதுகாக்கவும்'



கொரோனா தொற்றுக் காலப்பகுதியில் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம், தொழிற்சாலை உரிமையாளர்கள், சர்வதேச ஆடை உற்பத்தி நிறுவனங்கள் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்தது.

கடந்த மே 21ஆம் திகதி நாடு முடக்கப்பட்டபோது பயணக்கட்டுப்பாடு மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூட தடை விதிக்கப்பட்ட போதும் ஆடைத்தொழிற்சாலைகளைத் திறக்க ஜனாதிபதி கட்டளையிட்டிருந்தாகவும் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

பல தொழிற்சாலைகளில் ஏராளமானோருக்கு தொற்றுக்கள் ஏற்பட்டதாக தொழிற்சங்கங்களாலும் பொதுச் சுகாதார அதிகாரிகளாலும் அறிக்கையிடப்பட்டிருந்தாகவும் எனினும் உற்பத்தி நிலைகளைப் பராமரிப்பதற்காக தொழில் வழங்குநர்களால் குறைவான சோதனைகளும் குறைவான அறிக்கையிடல்களும் வெளியிடப்பட்டதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டிருந்தது.

இலங்கையின் ஆடைத்தொழிலாளர்களுக்கு பாதுகாப்பாக வேலை செய்ய உரிமையுள்ளதாகவும் அவர்கள் நோய்வாய்ப்பட்டாலோ அல்லது தனிமைப்படுத்தப்பட்டலோ அவர்களுக்கு சரியான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியாவுக்கான பணிப்பளர் மீனாட்சி கங்குலி அவ்வறிக்கையில் தெரிவித்திருந்தார்.

## தப்பிய தொற்றாளரை தேடி வேட்டை



பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த கொரோனா தொற்றுக்குள்ளான ஒருவர் தப்பியோடியுள்ளார் என்று பலாங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கொஸ்ஹேன்கம, ஹேவாஹின்ன, அவிசாவளை என்ற முகவரியில் வசிக்கும் ஒருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலுள்ள சிங்கராஜ இடைத்தங்கல் கொவிட் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், மேலதிக சிகிச்சைகளுக்காக பலாங்கொடை ஆதார வைத்தியசாலைக்கு நேற்றைய தினம் மாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையிலேயே அவர், வைத்தியசாலையிலிருந்து தப்பியுள்ளார் என வைத்தியசாலைப் பொலிஸாரால் பலாங்கொடை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

தப்பிய நோயாளி தொடர்பான விசாரணைகளை பலாங்கொடை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

டோக்கன்களில் வித்தியாசம்

## தடுப்பூசி ஏற்ற வரிசையில் நின்றவர்களில் பதட்டம்

■ ஷாஜஹான்



கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு நேற்று (13) முதலாவது சினோர்ஃபாம் தடுப்பூசி, நீர்கொழும்பு மாவட்ட வைத்தியசாலையில் ஏற்றப்பட்டது.

இதன்போது, வைத்தியசாலைக்கு வெளியே நீண்ட வரிசை காணப்பட்டது. அவ்வாறு வரிசையில் நின்றவர்களுக்கு இலக்கங்கள் (டோக்கன்கள்) வழங்கப்பட்டு, தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனினும், தொடர்ச்சியாக இலக்கங்கள் வழங்கப்படாமல், இலக்கங்களுக்கு இடையிலே பல வித்யாசங்கள் காணப்பட்டதால் வரிசையில் நின்ற பொதுமக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தமக்கு முன்னால் இருபவருக்கு ஓர் இலக்கமும் அடுத்ததாக இருக்கக்கூடிய தனக்கு பல இலக்கங்கள் இடைவெளியில் இலக்கம் வழங்கப்பட்டதாகவும் நடுவில் உள்ள அந்த இலக்கங்கள் யாருக்கு வழங்கப்பட்டது எனவும் பொதுமக்கள் கேள்வி எழுப்பினர்.

இதன்காரணமாக அங்கு பதட்ட நிலைமை ஏற்பட்டது.

அந்த இலக்கங்கள், வைத்தியசாலையில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக இலக்கத்தை வழங்கிய பாதுகாப்பு உத்தியோகத்தர் தெரிவித்ததாக வரிசையில் நின்ற பெண்ணொருவர் தெரிவித்தார்.

எதுஎவ்வாறிருப்பினும், இது குறித்து வைத்தியசாலைக்குள் சென்று செய்தி சேகரிப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

சுற்றுலாத்துறைக்கு

## 'ஒரு வருடத்தில் 5 பில்.டொலர் நட்டம்'



ஏப்ரல் தாக்குதல் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக சுற்றுலாத்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் வைத்து நேற்று (13) ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்

இதன்காரணமாக, ஒரு வருடத்தில் மாத்திரம் அரசாங்கத்துக்கு கிடைக்கவேண்டிய 5 பில்லியன் டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள டொலர் நெருக்கடிக்கு இதுவே பிரதான காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாகாணங்களுக்கு இடையில்

## மட்டுப்படுத்தப்பட்ட பஸ், ரயில் சேவைகள்

கொவிட் 19 ஒழிப்பு தேசிய செயலணியின் அனுமதிக்கு அமைய, இன்று (14) முதல் மாகாணங்களுக்கு இடையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பஸ் மற்றும் ரயில் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதனடிப்படையில், அரச மற்றும் தனியார் பிரிவுகளில் அத்தியாவசிய சேவை நிமித்தம் செல்பவர்கள் மாத்திரமே இவற்றில் பயணிக்க முடியுமென போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பயணிகள், அரச அல்லது தனியார் நிறுவனங்களின் அடையாள அட்டை அல்லது தாம் செல்லும் பணி தொடர்பிலான ஆவணத்தை வைத்திருக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்

கண்டி- கொழும்பு கோட்டைக்கு 2 அலுவலக ரயில் பயணமும், ரம்புக்கனை - கொழும்பு கோட்டைக்கு, சிலாபம்- கொழும்பு கோட்டைக்கு, பெலியத்தை - கொழும்பு கோட்டை தலா ஒரு ரயில் பயணமும் முன்னெடுக்கப்படவுள்ளது.

மேலும், காலி - கொழும்பு கோட்டை 1 ரயில் பயணமும், மஹவ- கொழும்பு கோட்டைக்கு 1 ரயில் பயணமும் காலை மற்றும் மாலை அலுவலக ரயில் சேவை அடிப்படையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

கொவிட்-19 வைரஸ் தாக்கம் காரணமாக மாகாணங்களுக்கு இடையிலான பொதுச் போக்குவரத்து சேவை முடக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## அதிகூடிய தடுப்பூசிகள் ஏற்றிய நாள்




இலங்கையில், அதிகூடிய கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்ட நாளாக நேற்று முன்தினம் பதிவாகியிருந்தது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு தெரிவித்தது.

அப்பிரிவு வெளியிட்டிருந்த அறிக்கையின் அடிப்படையில் 232,526 கொரோனா தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன.


கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 180 பேருக்கும் சைனோபாம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 173,988 பேருக்கும் அதன் இரண்டாவது டோஸ் 40,276 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

ஸ்புட்ணிக் 5 தடுப்பூசியின் முதலாவது டோஸ் 13,357 பேருக்கும் பைசர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 4,725 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, கடந்த 8 நாள்களாக தியத்த உயன வளாகத்தில் 43 ஆயிரத்து 548 தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்த இராணுவம், நேற்று முன்தினத்தில் மாத்திரம் 1,516 தடுப்பூசிகள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தது.

எம்.எச் எம் ஷம்ஸின்

## 19ஆவது நினைவேந்தல் நிகழ்வு



எம்.எச்.எம். ஷம்ஸ் மன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள நினைவில் வாழும் ஷம்ஸ் 19ஆவது நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் 15ஆம் திகதி இரவு 8 மணிக்கு zoom வழியாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் தலைமைதாங்கவுள்ளார். வரவேற்புரையை, கலாபூசணம் எம்.ஏ.எம். நிலாம் ஆற்றுவார்.

அத்துடன், தெனகம ஸ்ரீவர்தன, என்.எம். அமீன் திக்குவல்லை கமால், எம்.ஏ.எம். மஸாஹிர், அன்பு ஜவஹர்ஷா, பஸ்மினா அன்சார் (கவி வாழ்த்து), ஜவாத் மரைக்கார், லரீனா ஏ.ஹக் , மேமன்கவி, ஒலுவில் ஜே.வஹாப்தீன் முருகபூபதி- அவுஸ்ரேலியா, மும்தாஸ் ஹபீல், தாஸிம் அஹமது, ரத்னசிரி விஜேயசிங்க ஆகியோர் இதன்போது உரையாற்றவுள்ளனர்.

நன்றியுரையை பத்திரிகையாளர் ஷம்ஸ் பாஹிம் நிகழ்த்துவதோடு,

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பை - நாச்சியாதீவு பர்வீன் Join Zoom Meeting

https://us05web.zoom.us/j/81400059380?pwd=NXZkSS9kL3VKZnVNYVA4dElFRkJ3Zz09

Meeting ID: 814 0005 9380 Passcode: 123456 Zoom வாயிலாக நடத்துவார்.

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) கீழ் கீழ்க்காணும் கம்பனி கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழாங்கபடுகின்ற அறிவித்தல்.

கம்பனியின் பெயர் : அருணஜி என்டர்பிறைசஸ் (பிரைவட்) லிமிட்டட்

பதிவு செய்யத அலுவலக : இல. 49/9ஏ, திசாநாயக மாவத்தை, நிக்பே, தெஹிவலை.

பதிவு செய்யத இல : பி வீ 00238339

கூட்டிணைக்கப்பட்ட திகதி : 20 ஏப்ரல் 2021

கம்பனி செயலாளர்

காட்டுப் பகுதியில்

# நாச செயல்கள்; தேடுதல் தீவிரம்

■ எப்.முபாரக்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதியில் பெருமதியான காட்டு மரங்கள் வெட்டப்பட்டுள்ளதுடன், மிருகங்களும் வேட்டையாடப்பட்டுள்ளன.

கந்தளாய், வான்எல, சைதாபிட்டி பகுதியில் இவ்வாறு இனந்தெரியாதோரால் அதிகளவான பல, வீர மற்றும் வின்னாங்கு மரங்கள் பாரியளவில் வெட்டி வீழ்த்தப்பட்டும், தீ வைக்கப்பட்டும் காணப்படுகின்றன.

அத்தோடு, வேட்டையாடிய மானின் எழும்புக்கூடு மற்றும் அதன் கொம்புகளும் அப்பகுதியில் காணப்படுகின்றன.

இந்தச் சட்டவிரோத செயல்களைச் செய்த நபர்களை தேடிவருவதாக கந்தளாய் வனப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.





மேற்படி பகுதி அதிகளவான தொல்பொருள் இடங்கள் காணப்படும் ஒரு பகுதியாகும் எனவும் இப்பகுதியில் காணப்படும் வனப் பாதுகாப்புக் கற்களும் வீசப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை கந்தளாய் பொலிஸாரும் கந்தளாய் வனப் பாதுகாப்பு பிரிவினரும் முன்னெடுத்து வருகின்றனர்.




## கவனயீர்ப்பு...

சிறுமிகள் மற்றும் பெண்கள் பாலியல் ரீதியில் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுவதைக் கண்டித்து, மட்டக்களப்பு, செங்கலடியில் நேற்று (13) கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கவனயீர்ப்பில், மகளிர் அமைப்பின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

(படப்பிடிப்பு - பேரின்பராஜா சபேஷ்)



பட்டதாரி பயிலுநர்களை

# நிரந்தரமாக்க கோரிக்கை



■ எம்.எஸ்.எம். ஹனீபா

அரச நிறுவனங்களில் கடமை புரியும் பட்டதாரி பயிலுநர்களை, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 03ஆம் திகதிக்கு முன்னர் நிரந்தரமாக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, பயிற்சி பட்டதாரிகள் ஒன்றியத்தின் தலைவர் ஏ.ஆர். றினோஸ் தெரிவித்தார்.

ஒன்றினைந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மத்திய நிலையம் மற்றும் பயிற்சி பட்டதாரிகள் ஒன்றியம் இணைந்து ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்களுக்கும் கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் கையளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன்படி, பயிற்சி பட்டதாரிகள் ஒன்றியத்தால் அம்பாறை மாவட்டச் செயலாளர் டி.எம்.எல். பண்டார நாயக்கவிடம் இது தொடர்பான மகஜர், நேற்று முன்தினம் (12) கையளிக்கப்பட்டுள்ளது.

சகல பயிலுநர்களையும் நிரந்தரமாக்கும் போது பயிற்சி பெறும் நிறுவனங்களில் நிரந்தரமாக்க வேண்டுமெனவும், நிரந்தரமாக்கும் போது பயிற்சி பெறும் நிறுவனங்களை மாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட பயிலுநர்கள் உட்பட சகல பயிலுநர்களுக்கும் கொவிட்-19 தடுப்பூசி வழங்குதல், சுகாதாரக் கடமைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள பயிலுநர்களுக்குரிய விசேட கொடுப்பனவை வழங்குவதோடு, ஏனைய பயிலுநர்களுக்கும் மேலதிக கொடுப்பனவை வழங்குதல், மாதாந்தக் கொடுப்பனவை வழங்குதல் போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில்

## தடுப்பூசிகளை 65,024 பேர் ஏற்றிக்கொண்டனர்'

■ வா.கிருஸ்ணா, பேரின்பராஜா சபேஷ்



மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 65,024 பேருக்கு, கொரோனா தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனையில் நேற்று (13) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக் காலை முடிந்த 24 மணித்தியாலங்களில் 79 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், “மூன்றாம் கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்துக்குக் கிடைக்கப்பெற்ற 50,000 தடுப்பூசிகளில் 37,024 தடுப்பூசிகள் இதுவரை வழங்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக வழங்கப்பட்ட தடுப்பூசிகளில் 14,981 ஏற்றப்பட்டுள்ளன.

மாவட்டத்திலுள்ள 12,000 ஆசிரியர்களில் 7,000 ஆசிரியர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. இவ்வாறு, மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 65,024 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன” என்றார்

இதேவேளை, காத்தான்குடி பகுதியில் 3 பிரிவுகள் நேற்று (13) விடுவிக்கப்படவள்ளதோடு, மாமாங்கம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அதிகமான கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுவருவதால் தொடர்ந்தும் அப்பகுதி தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னாருக்கான தடுப்பூசிகள்

# ‘விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ளன’

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

இந்திய மீனவர்களுடன் தொடர்புபடுகின்ற மன்னார் மீனவர்களால் ஏற்படக்கூடிய கொரோனா அச்ச நிலையை நீக்குவதற்காக, மன்னார் மாவட்டத்துக்கு விசேடமாக தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என, மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில், நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இதனை தெரிவித்தார்.



அங்கு தொடர்ந்துரைத்த அவர், மன்னார் மாவட்டத்துக்கென மேலும் வழங்கப்பட்டுள்ள 22 ஆயிரத்து 230 பைஸர் தடுப்பூசிகள், இன்று (14) முதல் 30 வயதுக்கு மேற்பட்ட மன்னார் மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாக கொண்டவர்களுக்கு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

செப்டெம்பர் மாதம் நாட்டை முழுமையாக திறக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் சிந்தனையின் அடிப்படையில், இந்திய மீனவர்களுடன் தொடர்புபடுகின்ற மன்னார் மீனவர்களால் ஏற்படக்கூடிய கொரோனா அச்ச நிலையை நீக்குவதற்காக, மன்னார் மாவட்டத்திற்கு விசேடமாக குறித்த தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும், அவர் கூறினார்.

குறித்த தடுப்பூசிகள் மன்னார் மாவட்டத்தில் 5 அல்லது 6 நிலையங்களில், ஒவ்வொரு நாளும் வழங்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

2, 3ஆம் நிலைகளைக் கடந்த கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் 1 வயதிலும் குறைந்த குழந்தைகளைக் கொண்டுள்ள தாய்மார்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை எதிர்வரும் வாரத்தில் இடம்பெறுமெனத் தெரிவித்த அவர், இவர்கள், பொது மக்களுக்கான தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்கு சென்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ள தேவையில்லை எனவும் இவர்களுக்கு விசேடமாக வேறு நிலையங்களில் எதிர்வரும் வாரம் தடுப்பூசி செலுத்தப்படும் எனவும் கூறினார்.



## அடிக்கல் நாட்டல்...



வறுமை ஒழிப்பு செயற்றிட்டத்துக்கமைய, சௌபாக்கியா உற்பத்தி கிராமத்தின் விற்பனை நிலையத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில, நேற்று (13) நடைபெற்றது. இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

(படப்பிடிப்பு: க. அகரன்)



யாழ்ப்பாணத்தில்

## தடுப்பூசி ஏற்றியோர் விவரம்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில், இரண்டாம் கட்டத்துக்கான முதல் டோஸ் தடுப்பூசியை இதுவரை 50,682 பேர் பெற்றுக்கொண்டுள்ளனர்.

சினோர்ஃபோம் தடுப்பூசியைப் 1,825 பேர் நேற்று முன்தினம் (12), பெற்றுக்கொண்டனர்.

இதற்கமைய, கடந்த திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் தடுப்பூசி வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 50,682 பேர் தடுப்பூசி பெற்றுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதுக்குடியிருப்பில் வெடிகுண்டு மீட்பு

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குட்பட்ட இரணைப்பாலை பகுதியில, நேற்று (13) காலை, வெடிக்காத நிலையில் நிலத்தில் புதையுண்டு காணப்பட்ட பாரிய வெடிகுண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

போரின் போது வீசப்பட்ட இந்த குண்டு, சுமார் 200 கிலோகிராமுக்கும் அதிக நிறைகொண்டதாகும்.

இதை அகற்றுவது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



வவுனியா பல்கலைக்கழக

## துணைவேந்தராக மங்களேஸ்வரன் நியமனம்



■ க. அகரன்

வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக கலாநிதி ரி.மங்களேஸ்வரன், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாக முதல்வராக நீண்ட காலமாக கடமையாற்றிய கலாநிதி ரி.மங்களேஸ்வரன், வவுனியா பல்கலைக்கழக உருவாக்கத்துக்கு அயராது உழைத்தவராவார்.

கரையொதுங்கிய

# நாட்டுப்படகு தொடர்பில் விசாரணை

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சௌத்பார் கடற்கரை பகுதியில். நேற்று முன்தினம் (12) மாலை, இந்திய நாட்டுப் படகு என சந்தேகிக்கப்படும் படகொன்று கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

பதிவு இலக்கம், உரிமையாளர் பெயர் என எதுவுமே பொறிக்கப்படாத நிலையில், சிறிய உடைவுகளுடன் குறித்த நாட்டுப்படகு கரை ஒதுங்கியுள்ளது.



காற்றின் வேகம் காரணமாக குறித்த படகு கரையொதுங்கியுள்ளதா அல்லது சட்டவிரோத கடத்தல் நடவடிக்கைக்காக பயன்படுத்தப்பட்டு கைவிடப்படுள்ளதா என்ற கோணத்தில், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.





கட்டுகஸ்தோட்டையில் 5 மாடிக் கட்டடம் தாழிறக்கம்

# மாற்று ஏற்பாடுகள் முன்னெடுப்பு

■ சேஹ்ன் செனவிரத்ன

கட்டுகஸ்தோட்டை - குருநாகல் பிரதான வீதியின், கட்டுகஸ்தோட்டை முச்சந்தியிலிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்தில் நிர்மாணிக்கப்பட்டு வந்த, 5 மாடிக் கட்டடம் ஒன்று நேற்று முன்தினம் (12) மாலை திடீரென தாழிறங்கியுள்ளது.

இதன் காரணமாக, கட்டுகஸ்தோட்டை- குருநாகல் வீதியில், மறுஅறிவித்தல் வரை கனரக வாகனங்கள் பயணிப்பதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதென அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தாழிறங்கியுள்ள கட்டடம் அமைத்தலின் பலவீனம் காரணமாகவே கட்டடம் தாழிறங்கியுள்ளமைக்கான காரணம் என, குறித்த இடத்தை பரி சோதனை செய்ய வருகை தந்திருந்த மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் இந்திக ரணவீர தெரிவித்தார்.

இக்கட்டடத்தை அமைக்கும் போது, மண்ணின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் பிரதான வீதியுடன் கட்டடம் இணைக்கப்பட்டுள்ளதால்சாய்வின் உந்துதலைத் தாங்கும் அளவுக்கு கட்டடம் வலுவாக இல்லை என்றும் முதற்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளதென, தேசிய கட்டட ஆய்வு நிலையத்தின் கண்டி மாவட்டத்துக்கு பொறுப்பான சிரேஸ்ட புவிச் சரிதவியலாளர் சமந்தா போகாஹாபிட்டிய தெரிவித்தார்.



இதேவேளை,நேற்றைய தினம் சம்பவ இடத்துக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்த மத்திய மாகாண ஆளுநர் லலித்.யூ.கமகே, இந்தக் கட்டடத்தை அமைப்பதற்கு, சட்டரீதியாக அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பது குறித்து தகவல்களை வழங்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, கனரக வாகனங்கள் பயணிப்பதற்காக மாற்று வீதியொன்றை ஏற்பாடு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய, கண்டி, மாத்தளையிலிருந்து கட்டுகஸ்தோட்டை வீதியூடாக குருநாகல் நோக்கி பயணிக்கும் வாகனங்கள், கொஹாகொட வீதியில் இடது புறம் திரும்பி, பரிகம வீதியூடாக குருநாகலுக்குப் பயணிக்கலாம் என்றும், குருநாகலிலிருந்து கண்டி நோக்கிப் பயணிக்கும் கனரக வாகனங்கள், பரகம ஊடாகப் பயணித்து, கொஹாகொட ஊடாக கட்டுகஸ்தோட்டைக்குச் செல்லலாம் என்றும் கட்டுகஸ்தோட்டை போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்சரிவு அபாயம் மிக்க காணிகளில் இரத்தினக்கல் அகழ்வு

# பொதுமக்கள் எதிர்ப்பு

■ ஏ.ஏ.எம்.பாயிஸ்

இரத்தினபுரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நிரல்கம கிராமத்தில் மண்சரிவு அவதானத்துக்குரிய இடங்களில், சில வியாபாரிகள் இரத்தினக்கல் அகழ்வு முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், இவர்கள் இப்பிரதேசத்தில் இரத்தினக்கல் அகழ்வுக்காக, இரத்தினக்கல் அதிகார சபையின் அனுமதிப்பத்திரங்களை பெறவும் முயற்சித்து வருவதாக இப்பிரதேச மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதன்காரணமாக, இப்பகுதியில் பாரிய மண்சரிவு இடம்பெறலாம் எனவும் இம்முயற்சிக்கு அனுமதிப் பத்திரம் வழங்க வேண்டாம் எனவும் இப்பிரதேச மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இப்பிரதேசத்தில் மண்சரிவுகள் ஏற்படலாம் என புவிச்சரிதவியல் திணைக்களம், தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியன எச்சரித்துள்ள நிலையில், பொதுமக்கள், சுற்றாடலின் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளாது இம்முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதால், பொதுமக்கள் எதிர்ப்பினை தெரிவித்து வருகின்றனர்.

உக்குவளை பிரதேச சபையில்

# எதிர்ப்புக்கு எதிர்ப்பு

■ ரவீந்திரவிராஜ்

அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிப்பு, உரப் பிரச்சினை, கொத்தலாவல சட்டமூலம் என்பவற்றுக்கு எதிராக, உக்குவளை பிரதேச சபையின் சுயேட்சை உறுப்பினர் ஒருவர், சபையின் முன்பாக முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, உக்குவளை பிரதேச சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்களால் குறித்த இடத்திலேயே எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.




மலையக ஆசிரியர்களுக்கான

# தடுப்பூசி செலுத்தும் நிகழ்வு இன்று

■ சுஜிதா, இரா.யோகேசன், நீலமேகம் பிரசாந்த்,

கொட்டக்கலை சுகாதார பிரிவுக்கு உட்பட்ட 44 பாடசாலைகளில் ஆயிரம் ஆசிரியர்களுக்கு, இன்று (14) கொரோனா தடுப்பூசி செலுத்தப்படவுள்ளதென, கொட்டக்கலை சுகாதார பரிசோதகர் எஸ். சௌந்தர் ராகவன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இன்று காலை 9 மணி தொடக்கம் கொட்டகலை தேசிய கல்லூரியில் ஆசிரியர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும் என்றார்.

இதேவேளை, ஹட்டன் கல்வி வலயத்தின் அம்பகமுவ சுகாதார பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான முதலாம் கட்ட கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி எதிர்வரும் 15ஆம் திகதி இடம்பெறும் என, அம்பகமுவ பொதுச் சுகாதார வைத்திய நிலையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அன்றைய தினம் காலை 9 மணிமுதல் கினிகத்தேனை மத்திய கல்லூரியிலும் ஹட்டன், ஸ்ரீபாத பாடசாலையிலும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

மேலும், லிந்துலை, மெராயா ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்களுக்கான தடுப்பூசி வழங்கும் வேலைத் திட்டமானது, நாளைய (15) 16 ஆம் திகதிகளில் லிந்துலை பிரதேச பொதுச் சுகாதார வைத்திய காரியாலயத்தில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளதாக பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் ஸ்ரீகாந்த் தெரிவித்தார்.

மேலும், 15ஆம் திகதி டயகம ஹோல்புறூக் ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் பணியாற்றும் சகலருக்கும், ஹோல்புறூக் விஞ்ஞான கல்லூரியில் தடுப்பூசி செலுத்தப்படும் என பிரதேசத்துக்குப் பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் புஷ்பகாந்தன் தெரிவித்தார்.



# தென்னங்கன்றுகள் பகிர்ந்தளிப்பு

■ எம். செல்வராஜா

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின், தென்னங்கன்றுகளைப் பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ், பதுளை மாவட்ட பெருந்தோட்ட மக்களுக்கு தென்னங்கன்றுகள் வழங்கும் நிகழ்வு பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் தலைமையில் நேற்று (13), அவரது பதுளை பணியக மூன்றலில் இடம்பெற்றது.







கொட்டகலை பிரதேச சபைக்கு

# சிறந்த அங்கிகாரம்

## தவிசாளர் ராஜமணி பிரசாந்த் பெருமிதம்

■ துவாரகஷான்

மத்திய மாகாணத்தில் 2020 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்காய்வின் அறிக்கையின்படி, கொட்டகலை பிரதேச சபைக்கு சிறந்த சபைக்கான அங்கிகாரம் கிடைத்துள்ளதென, நேற்று (13) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாதாந்த அமர்வில் தலைமை வகித்துப் பேசும் போது தெரிவித்தார்.

பிரதேச சபை உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்போடு செயலாளர் உட்பட சகல உத்தியோகத்தர்களும் தமது கடமையை உணர்ந்து செயற்பட்டு வந்துள்ளதால் கணக்காய்வு அறிக்கையில் எந்த விதமான ஊழலும் இல்லாத சிறந்த சபைக்கான அங்கிகாரம் மத்திய மாகாணத்தில் கிடைத்துள்ளது.

> “சபை உறுப்பினர்கள், செயலாளர் உட்பட சகல உத்தியோகத்தர்களும் தமது கடமையை உணர்ந்து செயற்பட்டதால் ஊழல் இல்லாத சிறந்த சபைக்கான அங்கிகாரம் கிடைத்துள்ளது

அதேபோல், மத்திய மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையில் நடைபெறவுள்ள போட்டிகளில் எமது சபை வெற்றி பெறாவிட்டாலும் சிறந்த சபையாகத் தெரிவு செய்யப்பட்டாலே போதும் என்பதால் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம் என்றார்.

நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளராக

# சுஜீவ போதமான நியமனம்

■ ஆ.ரமேஸ் டி.சந்ரு.

நுவரெலியா மாவட்ட மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ள சுஜீவ போதமான, நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று (13) காலை தனது கடமைகளை ஆரம்பித்தார்.

நுவரெலியா மாவட்ட செயலக மேலதிக செயலாளராக கடமையாற்றிய ஏ.பி. சரத்சந்திர, புத்தசாசன அமைச்சின் பௌத்த விவகாரங்களுக்கான மேலதிக ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளதால், அவரின் வெற்றிடத்துக்கே சுஜீவ போதமான நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் கைது

# அரசாங்கத்தின் சதி

## மலையக ஆசிரியர் சங்கங்கள் குற்றச்சாட்டு

■ எஸ்.சதீஸ்

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட சம்பவம் அரசாங்கத்தின் சதி என மலையக ஆசிரியர் சங்கங்கள் குற்றஞ்சுமத்தியுள்ளன.

நேற்று (13) காலை ஹட்டன் பகுதியில் உள்ள விருந்தகம் ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அமைப்பாளர் எஸ். ரூபன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஜோன் கொத்தலாவல சட்டமூலம் இந்த நாட்டில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் இன்னும் கைதியாகவே இருந்து வருகிறார். ஜனநாயக உரிமைக்காக அனைத்து தொழிற்சங்கங்களும் இன்று எம்மோடு கைகோர்த்துள்ளன.



இலவச கல்வியானது சாதாரண மாணவர்களுக்கு எதிர்காலத்தில் ஓர் எட்டாக்கனியாக இருக்கும். எமக்கு, எங்களது சிரேஷ்ட பிரஜைகள் பெற்றுக் கொடுத்த இலவசக் கல்வியானது, வேறு ஒரு நகர்வை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

எமது செயலாளரின் கைது குறித்து, இலங்கை அசிரியர் சங்கத்தின் தலைவர், அரசாங்கத்துக்கும் அமைச்சர்களுக்கும் எழுத்து மூலமாக அறிவித்துள்ள நிலையில், எமது ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் விடுதலை செய்யப்படாவிட்டால், எதிர் வரும் காலங்களில் மாற்று தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கப் போவதாக அவர் தெரிவித்தார்

மஸ்கெலியா– நல்லதண்ணி பிரதான வீதியில் மண்சரிவு

# போக்குவரத்துகள் மட்டுப்படுத்தப்பட்டன

■ ரஞ்சித் ராஜபக்ஷ

மஸ்கெலியா- நல்லதண்ணி, நோட்டன்பிரிட்ஜ் பிரதான வீதியின், பிரவுன்லோ தோட்டத்துக்கு அருகில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்துகள் மட்டுப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு மண்சரிவு ஏற்பட்டுள்ள இடத்தில் நீர் வழிந்தோடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள மதகு அடைபட்டிருப்பதால், மழையுடன் அதிகரித்த நீர் பிரதான வீதியூடாகப் பெருக்கெடுப்பதால், குறித்த வீதியின் ஒரு பகுதியில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த வீதியூடான போக்குவரத்து, ஒரு வழிப்பாதையாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மண்சரிவு ஏற்பட்ட பகுதியைப் புனரமைப்பு செய்யும் பணிகளை வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மேடு, பள்ளங்களை அறிந்து வைத்திருப்பதே காலத்தின் தேவை

ஒன்றிலிருந்து மீண்டெழுந்து கொண்டிருக்கையில், மற்றொன்று ஏறி அமிழ்த்துவதை வாழ்கையில் அனுபவிக்காதவர்கள் இருக்கவே மாட்டார்கள். அதிலிருந்து மீண்டெழும்போது, மற்றுமொரு சம்பவம் தலையைக் குடைந்துவிடும். அவ்வாறான மேடு பள்ளங்கள் அடங்கியதுதான் வாழ்க்கையாகும்.

இவ்வாறான வாழ்க்கையோட்டத்தில், சுழற்சி முறையின் கீழ், இயற்கையும் சீண்டிப்பார்ப்பதுதான் ஜீரணிக்கமுடியாமல் இருக்கிறது. அதிலிருந்து மீண்டெழுவது, ஒரு சில பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கு இலகுவானதாய் அமையும். இன்னும் சிலர், அவ்விடத்திலிருந்து குடிபெயரவேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுவிடுவர்.

கொரோனா வைரஸ் தொற்றால் அமல்படுத்தப்பட்டிருந்த தடைகள் பெரும்பாலும் தளர்த்தப்பட்டு, ஓரளவுக்கேனும் நாடு திறந்துவிடப்பட்டிருக்கிறது. இன்றிலிருந்து மாகாண எல்லைகளும் ஓரளவுக்கு திறந்துவிடப்படவுள்ளன. இந்நிலையில்தான், இயற்கையும் கோரத்தாண்டவம் எடுத்து ஆடிக்கொண்டிருக்கிறது.

கடந்தகாலங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இம்முறை ஏற்பட்டிருக்கின்ற இழப்புகள் குறைவானவையாகும். ஆனாலும், உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. அத்துடன் சொத்திழப்புகளும் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஆகையால், நாட்டில் தற்போது நிலவுகின்ற சீரற்ற வானிலையால் ஏற்படும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் விழிப்பாக இருப்பது அவசியமாகும்.

நீரேந்தும் பிரதேசங்களில் மழைபெய்வதால், காட்டாற்று வெள்ளம் ஏற்படும். அது கரைபுரண்டு ஓடுவது, தாழ்நிலப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்குத் தெரியாது. அதனால், ஆற்றுக்குச் சென்று குளித்துக்கொண்டிருக்கும் போது, ஆற்றின் அடியில் ஓடும் வேகமான நீரோட்டத்துக்குள் சிக்கிக்கொள்கின்றனர். ஆகைவே, வானிலை அவதான நிலையத்தின் அறிவிப்புகளுக்கு அவ்வப்போது செவிகளை கொடுக்கவேண்டும்.

மலைப்பாங்கான பிரதேசங்களில் வசிப்போரும், நீர்நிலைகளை அண்டி வாழ்வோரும், இன்னுமின்னும் அவதானமாக இருக்கவே வேண்டும். சிலர், மலைப்பாங்கான பிரதேசங்களில் சட்டவிரோதமாகக் குடியேறி, குடியிருப்புகளை அமைப்பதற்காக, மேடுகளைக் குடைந்து, குடைந்து செல்வர், இறுதியில் அம்மேடு, தங்களுக்கே எமனாகியும் விடுவதுண்டு.

இவ்வாறு இயற்கையின் கோரத்தாண்டவத்துக்குள் செயற்கையான கட்டடங்களும் சிக்கிக்கொள்வதுண்டு, அடித்தளத்தைப் பலமிக்கதாக நிர்மாணித்துக்கொள்ளாமை, தரமற்ற கட்டட நிர்மாணம், கட்டடம் கட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் தரமற்றவையாக இருத்தல், அல்லது உரிய நிறுவனங்களிடமிருந்து முறையான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமை இப்படி அடிக்கிக்கொண்டே போகலாம்.

அதற்காக இயற்கையின் மீது கையை வைத்து, அதற்கே இரையாகிவிடக்கூடாது. இயற்கையின் மீது அன்பு செலுத்த வேண்டும். இல்லையேல், சூழற்சி முறையில் ஏற்படும் இயற்கை மாற்றங்களுக்குள் சிக்கிக்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே ஏற்படும்.

ஆகையால், வாழ்க்கையில் மட்டுமன்றி, இயற்கையின் மேடு, பள்ளங்களையும் அறிந்து வைத்திருப்பது அவசியம். அதனூடாக தேவையில்லாத அனர்த்தங்களைத் தவிர்க்கலாம் என்பதே எமது அவதானிப்பாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

## வாழ்வியல் தரிசனம்

நல்ல நோக்கங்கள் உங்களது அந்தரங்க ஆன்மாவைச் சுத்தப்படுத்தும். எமக்கே தெரியாமல் எமது ஆன்மா எமது செயல்களைப் பதிவு செய்கின்றது. எனவே, செய் கருமங்களை தூய்மையுடன் வைத்திருக்கவும்.

நல்ல எண்ணங்கள் இல்லாதவர்கள் மக்கள் முன் தங்களை முன்நிறுத்த முனையலாகாது. மனிதனுக்கு மனசாட்சி முக்கியமானது. எதனையும் செய்யும் முன் நெஞ்சத்தோடு உரையாடுக.

வாழ்க்கை விளையாட்டு இடமல்ல. ஆனால், விளையாட்டிலும் நேர்மை அவசியமாகும். இதிலும் கூட, கபட நாடகங்கள் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன. விளையாட்டுப் போட்டிகளில் சூது, பேரம், பேசுதல், அதிகார பலம் எனப்பல விடயங்கள் உள்ளே நடக்கின்றன.

மனசாட்சியை இயக்குவது கூட தேகத்தில் உள்ள உயிராகும் என்பதை உணர வேண்டும். வாழ்க்கையில் பேசுவது ஒன்றாகவும், செயல் வேறாகவும் இருக்கலாகாது.

யாரோ ஒருவர் தவறு செய்து, அதன்மூலம் ஏதாவது வரவு கிட்டினால் அதுவே அதிர்ஷ்டம் என்றால், அதுவே தொடருமாயின், பாவம் செய்வதுபெருவினைகளை வலிந்து ஏற்றுக்கொள்ளும் நிலையாகவே அது அமையும். நேர்மை வழியை விடச் சந்தோஷம் வேறு ஏது?

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தனிமைப்படுத்தல் தண்டனையா?



எம்.எஸ்.எம். ஐயூப்

கடந்த வருடம் மே மாதம் 17, 18ஆம் திகதிகளில், வடக்கில் பல இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், செம்மனியில் நடைபெற்ற அவ்வாறானதோர் அஞ்சலி நிகழ்வுக்குச் சென்ற வடமாகாண முன்னாள் முதலமைச்சரை, பொலிஸார் இடைவழியில் மறித்தனர். "நீங்கள் எமது பேச்சைக் கேட்காமல் சென்றால், உங்களை 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்துவோம்" என்று பொலிஸார் அவரை எச்சரிக்கை செய்தனர்.

அப்போது, யாழ்ப்பாணத்தில் அமலில் இருந்த இரவு நேர கொவிட்-19 பெருந்தொற்றுக்கால ஊரடங்குச் சட்டத்தையோ, முகக்கவசம் அணிய வேண்டும் என்ற சுகாதாரத்துறையினரின் ஆலோசனையையோ தாம் மீறவில்லை என்றும் தம்மோடு வருவோர் தனித்தனி வாகனங்களில் வருவதால் தாமோ அவர்களோ சமூக இடைவெளி தொடர்பான ஆலோசனையையும் மீறவில்லை என்றும் முதலமைச்சர் எவ்வளவோ எடுத்துக் கூறியும் பொலிஸார் அதற்குச் செவிசாய்க்கவில்லை.

தனிமைப்படுத்தல் என்பது, பொலிஸாரின் ஆலோசனையை பின்பற்றாததற்கான தண்டனையல்ல; அது, ஒருவரிடம் இருந்து ஒருவருக்கு ஒரு நோய் பரவாதிருக்கும் பொருட்டு, மேற்கொள்ளும் நடவடிக்கையாகும். அதற்காக ஒருவருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டு இருக்க வேண்டும். அல்லது, தொற்றாளர் ஒருவருடன், அவர் அண்மைய நாள்களில் தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அல்லது, அவ்வாறு தொடர்பு கொண்டதாகச் சந்தேகிக்கப்பட வேண்டும்.

அதுபோன்ற எவ்வித காரணமும் இன்றி, ஒருவரைத் தனிமைப்படுத்துவதாக இருந்தால், அது தனிமைப்படுத்தல் அல்ல; எதேச்சாதிகார பலாத்காரமாகும். அவ்வாறானதொரு சம்பவம், இப்போதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைகழகம் தொடர்பான சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியமும் இலங்கை ஆசிரியர் சங்கமும் முன்னணி சோஷலிஸக் கட்சியும் இணைந்து, நாடாளுமன்ற சந்தியில் கடந்த எட்டாம் திகதி ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர். அப்போது, இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மற்றும் முன்னணி சோஷலிஸக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் துமிந்த நாகமுவ உள்ளிட்ட 32 பேர் கைது செயயப்பட்டனர்.

கொழும்பு, கோட்டை மஜிஸ்திரேட் நீதிவான் முன்னிலையில் அன்றே அவர்கள் ஆஜர் செய்யப்பட்தோடு, பிணையில் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், நீதிமன்றத்திலிருந்து வெளியே வந்த அவர்களை பொலிஸார் பலாத்காரமாக பஸ்களில் ஏற்றி, தனிமைப்படுத்தலுக்காக முல்லைத்தீவுக்கு அழைத்துச் சென்றனர். இப்போது, மேற்படி சட்டத்துக்கான ஆர்ப்பாட்டத்துக்குப் புறம்பாக, பொலிஸாரின் இந்தப் பலாத்காரத்துக்கு எதிராகவும் நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதன் ஓர் அம்சமாக, ஆசிரியர் சங்கங்கள் திங்கட்கிழமை (12) முதல் இணையவழி கல்வி முறையைப் பகிஷ்கரித்து, வருகின்றனர். அதேவேளை, ஸ்டாலின், துமிந்த நாகமுவ ஆகியோரை விடுதலை செய்யாவிட்டால் நாடளாவிய வேலை நிறுத்தம் ஒன்றை ஆரம்பிப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கப் பிரிவின் தலைவர் கே.டி. லால் காந்த தெரிவித்து இருந்தார். எனவே, அரசாங்கம் இந்த விடயத்தில் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி இருக்கிறது.

ஆர்ப்பாட்டங்களைத் தடைசெய்வதாக சில நாள்களுக்கு முன்னர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்தாக செய்திகள் வெளியாகி இருந்தன. ஆனால், அதற்குப் பின்னர் அவர் வெளியிட்ட சுகாதார வழிகாட்டல்களில் அது குறிப்பிடப்படவில்லை.

அது குறிப்பிடப்பட்டு இருந்தாலும், தற்போதைய நிலையில் அது தர்க்க ரீதியாக அமையவில்லை. ஏனெனில், இறுதியாக வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்களின் பிரகாரம், சந்தைகள், வீதியோர வியாபாரம், சமய ஸ்தலங்கள் போன்றவை இயங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திருமண வைபவங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக பிரயாணிகள் நிரம்பிய நிலையில், பஸ்ளை வீதிகளில் காணக்கூடியதாக இருக்கின்றது.

அவ்வாறானதொரு நிலையில், சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய இது வரை காலமும் அனுமதிக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களை தடை செய்வதாக இருந்தால் அது சுகாதார காரணங்களின் அடிப்படையிலன்றி அரசியல் காரணங்களுக்காகவே மேற்கொள்ளப்பட்டதாக தெரிகிறது.

அந்த உத்தரவு சரியானது என்று ஏற்றுக் கொண்டாலும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைகழகம் சட்டமூலத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது, நீதிவான் அவர்களை பிணையில் விடுதலை செய்தார். அவர்களை தனிமைப்படுத்த வேண்டும் என அவர் கட்டளை பிறப்பிக்கவில்லை.

அதேவேளை ஆர்ப்பாட்டங்கள் சட்டப்படி தடைசெய்யப்பட்டு இருந்தால் அவர்கள் பிணையில் விடுதலை செய்தாலும் தனிமைப்படுத்த வேண்டும் என பொலிஸார் நீதிவானிடம் கோரிக்கை விடுத்திருக்கலாம். அவ்வாறு செய்யாது பொலிஸாரே அதனை முடிவு செய்யலாமா?

ஆர்ப்பாட்டக்காரர்கள் சமூக இடைவெளியை பேணவில்லை என்று தாம் அந்த நடவடிக்கையை எடுத்ததாக பொலிஸார் கூற முடியாது. ஏனெனில் பொலிஸார் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்கு வரும் வரை அவர்கள் சமூக இடைவெளியை பேணியே நடந்து கொண்டார்கள் என்பதை மக்கள் தொலைக்காட்சி மூலம் கண்டார்கள்.

பொலிஸார் அவர்களை கட்டிப் பிடித்து இழுத்துச் செல்ல முற்பட்டதாலேயே சமூக இடைவெளி மீறப்பட்டது, முகக் கவசங்கள் கழன்றன. அதுவே அவர்களை தனிமைப்படுத்தக் காரணமாக அமைந்தது என்று வாதிடுவதாக இருந்தால் அதே காரணத்துக்காக அங்கு வந்த பொலிஸாரையும் தனிமைப்படுத்த வேண்டும். பொலிஸார் பாதுகாப்பு உடைகளை அணிந்து இருந்தாலும் அவர்களது முகம் மூடப்பட்டு இருக்கவில்லை. கொரோனா வைரஸ் கண், மூக்கு, வாய் மூலமாகவே பரவுகிறது.

சுகாதார வழிகாட்டல்களை மதியாது வெளியே செல்வோரை பொலிஸார் கைது செய்கின்றனர். கடந்த வருடம் முதல் இதுவரை பொலிஸார் 49,449 பேரை சுகாதார வழிகாட்டலகளை மீறியதற்காக கைது செய்துள்ளதாகவும் அவர்களில் சுமார் 41.000 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் ஏனையோருக்கு எதிராகவும் விரைவில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண ஞாயிற்றுக்கிழமை (11) ஊடகங்களுக்குத் தெரிவித்து இருந்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சுமார் 50,000 பேரில் எவரையாவது பொலிஸார் தனிமைப்படுத்தவில்லை. ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்களும் அதே சுகாதார வழிகாட்டல்களைத் தான் மீறினார்கள் என்றால் அவர்களை மட்டும ஏன் தனிமைப்படுத்த வேண்டும்? இது அரசாங்கத்தின் அடக்கு முறை கொள்கைக்கு சுகாதார துறையினரும் பொலிஸாரும் துணைபோவதையே காட்டுகிறது.

இந்த விடயத்தை கடந்த வருடம் யாழ்ப்பாண நீதிவான மிகத் தெளிவாக விளக்கியிருந்தார். முள்ளிவாய்க்கால் நாளை அனுஷ்டித்தமைக்காக பொலிஸார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தையும் ஏனைய 10 பேரையும் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்து அவர்களை 14 நாட்களுக்கு தனிமைப்படுத்துமாறு கோரினர். அதனை ஏற்ற நீதிவான் பீட்டர் போல் அவர்களை 14 நாட்களுக்கு அவர்களது வீடுகளிலெயே தனிமைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பித்தார்.

ஆனால் மறுநாள் அவர்களது சார்பில் சட்டத்தரணிகள் நோய் பரவுவதை தடுப்பதே தனிமைப்படுத்துவதன் நோக்கம் என்றும் அஞ்சலிக் கூட்டங்களில் கலந்து கொண்ட எவருக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டதாக பொலிஸார் ஆதாரங்களை முன்வைக்காத நிலையில் இந்த 11 பேரும் தனிமைப்படுத்தப்படத் தேவையில்லை என்றும் எடுத்துரைத்தனர். சந்தேக நபர்களில் எவரும் தொற்றுக்குள்ளானதற்கான ஆதாரத்தை பொலிஸார் முன்வைக்காத காரணத்தால் நீதிவான் அவர்களை விடுதலை செய்தார்.

பொலிஸார் கடந்த 8 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்களை மிக மோசமாகவே நடத்தினர். பொலிஸார் அவர்களை இழுத்துச் செல்லும் போது அவர்களிடையே இருந்த சில பெண்களின் உடைகள் கிழிந்தன. அவர்களுக்கு மாற்று உடைகளை பெற்றுக் கொள்ளவாவது அனுமதி வழங்கப்படவில்லை. இந்த விடயத்தைப் பற்றி நாடாளுமன்றத்தில் குறிப்பிட்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இதற்கு முன்னர் ஒரு மொடல் அழகிக்கு அந்த வசதியை செய்து கொடுத்ததற்காக தாம் விமர்சிக்கப்பட்டதாகவும் இம்முறையும் ஸ்டாலினுக்கு சலுகை வழங்கியதாக குற்றஞ்சாட்டப்படக் கூடாது என்பதற்காக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அந்த வசதி வழங்கவில்லை எனவும் கூறினார்.

இவை சலுகையல்ல, பொதுமக்களின் உரிமைகளாகும். மேற்படி மொடல் அழகிக்கு மாற்று உடை பெற்றுக் கொள்ள வசதி செய்து கொடுத்ததற்காக எவரும் அமைச்சரை குறைகூறவில்லை. ஏனையோருக்கும் அந்த வசதி செய்து கொடுக்கப்படுவதில்லை என்பதே பலரது விமர்சனையாக இருந்தது. தனிமைப்படுத்தப்படுவோருக்கு ஒரு அமைச்சரின் விரும்பினால் மட்டும் தான் வசதிகளை செய்து கொடுக்கப்படும் என்றால் அது உரிமை அல்ல, சிறப்புரிமையாகிவிடுகிறது. இந்த வசதிகள் மனிதனின் அடிப்படை உரிமைகள்.

தற்போது தனிமைபபடுத்தலானது ஒரு தண்டனையாகவும் அரசியல் கருவியாகவும் அடக்குமுறையின் அம்சமாகவும் மாறியிருப்பதையே இவை அனைத்தும் எடுத்துக் காட்டுகின்றன. இலங்கையின் மனித உரிமை நிலைவரம் ஐ.நா. மனித உரிமை பேரவையினதும் ஐரோப்பிய ஒன்றியத்தினதும் கண்காணிப்புக்குள்ளாகியிருக்கும் நிலையிலேயே இவை இடமபெறுகின்றன.

இலங்கையில் மனித உரிமை மற்றும் தொழில் உரிமைகள் மிக மோசமாக இருப்பதாக கடந்த மாதம் 10 ஆம் திகதி ஐரேப்பிய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரேரணையொன்றிலும் கூறப்பட்டு இருந்தது. அதனை அடுத்தே பயங்கரவாத் தடைச் சட்டத்தை திருத்துப் போவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி நாடாளுமன்றத்தில் கூறினார். ஆனால் இது போன்ற அடக்குமுறைகளும் இடம்பெறும் போது உரிமைகள் விடயத்தில் அரசாங்கம் இதயசுத்தியோடு நடந்து கொள்வதாக ஐ.நாவோ அல்லது ஐரோப்பிய ஒன்றியமோ ஏற்றுக் கொள்ளுமா என்பது சந்தேகமே.

## கடிதங்கள்

### கிண்ணியா பொலிஸ் பிரிவில் அதிகரிக்கும் சட்டவிரோத செயல்கள்

திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல இடங்களில், சட்டவிரோத செயல்கள் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியாவில் அண்மைக் காலமாக திருட்டு, போதைப்பொருள் பாவனை, போதைப்பொருள் விற்பனை எனபட பல சட்டவிரோத செயல்கள் இடம்பெற்று வருதாகவும் இரவு நேரங்களில் அச்சத்துடனும் நிம்மதி இன்றியும் உறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு வருவதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கச்சக்கொடுத்தீவு, காக்காமுனை, குறிஞ்சாக்கேணி, நடுத்தீவு போன்ற பிரதேசங்களில் சட்டவிரோத செயல்களும் திருட்டுச் சம்பவங்களும் பெருமளவில் இடம்பெற்று வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அலைபேசி, நகைகள், பணம், ஆடு, மாடு, நீரிறைக்கும் இயந்திரம் போன்ற பொருட்களைத் திருடர்கள் களவாடிவ் செல்வதாகவும் இது குறித்து பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சட்டவிரோத செயல்கள் இப்பகுதிகளில் இடம்பெற்றுவருதைக் கட்டுப்படுத்த, உரிய பொறுப்பதிகாரி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

ஏ.ஆர்.எம். றிபாஸ்

தமிழ்நாடு

## ‘சமூக வலைத்தளங்களில் சுதந்திரம் இருக்க வேண்டும்‘



உலகின் மிக செல்வாக்கான மனிதர்களில் ஒருவரான சுந்தர் பிச்சை தமிழ் நாட்டைச் சேந்தவர். இவர் உலகின் சக்தி வாய்ந்த தொழில்நுட்ப நிறுவனமான கூகுளின் தலைமைச் செயற்பாட்டு அதிகாரியாகப் பணிபுரிகின்றார்.

இந்தியாவில் சமூக ஊடகங்கள் மற்றும் ஓ.டி.டி., தளங்களுக்கு புதிய தகவல் தொழில்நுட்ப விதிகள் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் இவ்விதிகளைப் பின்பற்றவேண்டிய நிலைக்கு, கூகுள், பேஸ்புக், வட்ஸ் அப், டுவிட்டர் உள்ளிட்ட சமூக வளைதளங்கள் தள்ளப்பட்டுள்ளன.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துச் தெரிவித்த அவர் "சமூக வளைத்தளங்களில் சுதந்திரம் இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

எனினும், உலகெங்கிலும் உள்ள பல நாடுகளில் இவற்றின் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. அந்த நாடுகளில் தகவல்களை வெளியிடுவதற்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

“வலுவான கட்டமைப்பு ஜனநாயக மரபுகள் மற்றும் மதிப்புகளைக் கொண்ட நாடுகள் இணையத்தின் சிதைவுக்கு எதிராக நிற்க வேண்டும்” என்றார்.

தமிழ்நாடு

## தொலைக்காட்சி விவாதங்களில் ‘அ.தி.மு.க பங்கேற்காது’

“அ.தி.மு.க நிர்வாகிகள் இனி தொலைக்காட்சி விவாதங்களில் பங்கேற்க மாட்டார்கள்” என அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி ஆகியோர், இணைந்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

குறித்த அறிக்கையில் “மக்களின் அடிப்படைத் தேவைகள், தினசரிப் பிரச்சினைகள் பல இருக்கின்றபோது, அதைப்பற்றி



எல்லாம் சிறிதளவும் கவலைப்படாமல், ஊடக நிறுவனங்கள், அ.தி.மு.க-வின் புகழுக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையிலும் சிறுமைப்படுத்தும் நோக்கிலும், ஊடக அறத்துக்குப் புறம்பாகவும், கழகத் தலைவர்களுக்குக் களங்கத்தை ஏற்படுத்துகின்ற விதத்திலும், விவாதத் தலைப்புகளை வைத்து நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்துவது வருத்தத்தையும் வேதனையையும் அளிக்கிறது.

இக்காரணங்களால், ஊடக விவாதங்களில் அ.தி.மு.க சார்பில் கழக நிர்வாகிகளோ, செய்தித் தொடர்பாளர்களோ, கழகத்தைச் சார்ந்தவர்களோ யாரும் இனி பங்கேற்க மாட்டார்கள் என்பதையும், எங்களை பிரதிநிதிப்படுத்துவதாகக் கூறிகொண்டு யாரையும் வைத்து பேசுவதை நிறுத்துமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம் என்று அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

தென்காசி

## பிளீச்சிங் பவூடரை உண்ட சிறுமிக்கு நேர்ந்த சோகம்

சிறுமியொருவர், பிளீச்சிங் பவுடர் (வெளிற்றும் தூள்) என்று தெரியாமல், அதை உட்கொண்ட விபரீத சம்பவம், அண்மையில் தென்காசி மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

செங்கோட்டை, மேலூரைச் சேர்ந்த ஐந்து வயதான குறித்த சிறுமி கடந்த 4 மாதங்களுக்கு முன்பு பிளிச்சிங் பவுடரை தெரியாமல் உட்கொண்டுள்ளார். இதனால் அவர் உடல் இழைத்து, எலும்புகள் தெரியும் அளவுக்கு மெல்லிய தோற்றத்துடன் பாதிப்புக்கு உள்ளாகி இருந்தார்.

இதுகுறித்த செய்திகள் ஊடகங்களில் வெளியாகியதைத் தொடர்ந்து செங்கோட்டை அரசு மருத்துவமனை மருத்துவரொருவர், குறித்த சிறுமிக்கு சிகிச்சையளிக்க ஆரம்பித்துள்ளார்.




இது குறித்து அவர் கூறியிருப்பதாவது, “குழந்தையின் உணவுக்குழாயில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. இதனால் குழந்தைக்கு உணவு உண்ண முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

“உயர்தர சிகிச்சைக்குத் தேவையான ஏற்பாடுகள் அனைத்தும் மதுரையில் செய்யப்பட்டு வருகிறது. அவருக்குத் தேவையான உதவிகளை செய்து தர தயாராக உள்ளோம்” எனத் தெரிவித்தார்.

கோவை

## யூடியூப் இல் கலக்கும் சிறுவன்



'ரிப்போர்ட்ஸ் கலாட்டா' என்ற பெயரில் செய்தி வாசிப்பாளரையும், செய்தியாளரையும் மையப்படுத்திய காணொளி இணையதளத்தில் வைரலாகிவருகிறது.

அதில் செய்தி வாசிப்பாளர், செய்தியாளர் என பல்வேறு பாத்திரங்களில் நடித்து அசத்தியிருக்கும் ரித்விக் இரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவனாவான்.

கோவையைச் சேர்ந்த மேற்படி சிறுவனின் யூடியூப் பக்கமானது ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வாரங்களே ஆகும் நிலையில் 40, 000 க்கும் மேல் சப்ஸ்கிரைபர்ஸ் கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"என்னோட அப்பா ஜோதிராஜ் சொல்லிக் கொடுப்பதையே செய்தேன்" எனச் சொல்லும் ரித்விக் வருங்காலத்தில் விண்வெளி வீரர் ஆகவேண்டும் என விரும்புவதாகத் தெரிவித்துள்ளான்.

சென்னை

## உயிரை பறித்த ‘கட்டிய பல்’

சென்னை வளசரவாக்கத்தைச் சேர்ந்த பெண்மணியொருவர் புதிதாகக் கட்டிய பல் கழன்று தொண்டையில் சிக்கியதால் உயிரிழந்த சம்பவமொன்று, அண்மையில் இடம்பெற்றுள்ளது. 43 வயதான குறித்த பெண், கடந்த வாரம் அப்பகுதியிலுள்ள தனியார் வைத்தியசாலையில் 3 பற்களை புதிதாகக் கட்டியுள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் (12) வீட்டில் தண்ணீர் குடிக்கும் போது 3 பற்களில் ஒன்று கழன்று தொண்டைக்குள் சென்று விட்டதாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து அவருக்கு வாந்தி, மயக்கம் ஏற்படவே உடனடியாக அருகில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழகம்

## பாடநூல்களில் ‘கருணாநிதியின் பணிகள் உள்வாங்கப்படும்’ திண்டுக்கல் லியோனி தெரிவிப்பு

முன்னாள் தமிழக முதலமைச்சர் கருணாநிதியின் பணிகளை மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில் பாடநூல்களில் உள்வாங்கும் திட்டம் உள்ளதாகத், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ.லியோனி தெரிவித்தார்.

இவர் கடந்த திங்கட் கிழமை (12) தனது பணியைப் பொறுப்பேற்ற போதே, இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் செய்தியாளர்களிடம் மேலும் தெரிவிக்கையில் “ஆசிரியர் பணியில் கிடைத்த அனுபவத்துடன், மாணவர்கள் பாடநூல்களை ஆர்வத்துடன் படிக்கும் வகையில் உருவாக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பேன்” என்று குறிப்பிட்டதோடு, "மாணவர்களுக்குச் சிரமத்தை



ஏற்படுத்தும் தேவையற்ற பாடத்திட்டங்கள் குறைக்கப்படும் என்றும், பாடத்திட்டங்கள் எளிமைப்படுத்தப்படும்” என்றும் கூறினார்.

அத்துடன், அறிவியல் பாடங்களைப் பொறுத்தவரை மாணவர்கள் எளிமையாகவும் இனிமையாகவும் படிக்கும் வகையில் உருவாக்கப்படும் எனவும் கூறினார்.



## பானம மட்டக்களப்பு ஆதீனம் உலருணவு உதவி

மட்டக்களப்பு ஆதீனத்தின் ஏற்பாட்டில் பிரித்தானியா தமிழர் கிரிகெட் சம்மேளனத்தின் நிதிப் பங்களிப்பில் ஒருதொகுதி உலருணவு நிவாரணப்பொதிகள் பாணமையில் வழங்கிவைக்கப்பட்டன.

பானம பிரதேசத்தில், சிங்கள மக்களோடு சிறுபான்மையாக வாழ்கின்ற தமிழர்கள், துயரத்தோடு வாழ்வதை அறிந்து மட்டக்களப்பு ஆதீனம் இந்நிவாரணப் பொருட்களை இருசமுகத்தினருக்கும் வழங்கியது.

பேரிடர்கால பெருந்துயர் துடைக்கும் அம்பாறை மாவட்டக் குழுவின் தலைவர் வீ. ரி. சகாதேவராஜா தலைமையில், மட்டக்களப்பு ஆதீனத்தின் தலைவர் மு. ஜெயபால், குழுவின் காப்பாளரும் காரைதீவு பிரதேச சபை தவிசாளருமான கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் ஆகியோர் கலந்து கொண்டு நிவாரணப் பொருட்களை வழங்கிவைத்தனர்.




## சுத்தமான குடிநீர் போத்தல்கள் வழங்கிவைப்பு

பாணந்துறை வைத்தியசாலையின் கொரோனா வாட்டுக்கும் ஏனைய வாட்டுகளுக்கும் சுடுநீருடன் கூடிய சுத்தமான குடிநீர் போத்தல்கள், மொரட்டுவை நலன்புரி அமைப்பின் தலைவர் டட்லி பெர்னாந்து இணைச்செயலாளர் தம்மிக சந்திரநாத் ஆகியோரினால் வழங்கி வைக்கப்பட்டன.







## கொட்டியாக்கலை கீழ்பிரிவில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு உதவிக்கரம்

கொட்டியாக்கலை பகுதியில் 20 கிலோ கிராம் கொழுந்து பறிக்குமாறு தோட்டத்தொழிலாளர்களை சித்திரவதைக்கு உட்படுத்திய தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக கடந்த நான்கு மாதங்களாகத் தோட்டமக்கள் வேலையின்றி பணி பகிஸ்கரிப்பை முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில் உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்தமையால் தனிமைப்படுத்தல் சட்டத்தில் அனைவரையும் தனிமைப்படுத்தியதோடு ஊரும் முடக்கப்பட்டது.

இந்நிலையில், மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஸ்ணன் கொட்டியாகலை கீழ்ப்பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டு வாழ்வாதரத்தை இழந்த குடும்பங்களுக்கு நிவாரண பொருட்களை செவ்வாய்கிழமை (13) வழங்கி வைத்தார். இதன்போது மலையக தொழிலாளர் முன்னணியின் நிதிச்செயலாளர் புஸ்பா



விஸ்வநாதன் உட்பட கட்சி அங்கத்தவர்களின் பங்களிப்போடு நிவாரண பொருட்கள் கையளிக்கப்பட்டன.

நீலமேகம் பிரசாந்த்



## மூதூர், சகாயபுரம்: பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உதவி

புன்னகை அமைப்பால் மூதூர், சகாயபுரம் கிராமத்தில் கணவனை இழந்த பெண்தலைமை தாங்கும் 25 குடும்பங்களுக்கு 2,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கிவைக்கபட்டன. இவற்றை மூதூர் பிரதேச இந்து குருமார் சங்கத் தலைவர் சிவசிறி இ. பாஸ்கரன் குருக்கள் முன்னின்று வழங்கினார். தற்கால நெருக்கடி நிலையைப் புரிந்துகொண்டு தமிழ் விருட்சம் எனும் அமைப்பு, இதற்கு நிதி உதவி பங்களிப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

06. தீஷான் அஹமட்

## பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு உதவி

‘சுபீட்சம்’ அமைப்பால் மாத்தளை, கவுடுபெலல்ல, பள்ளேவரதன பிரதேசத்தில் அமைக்கப்பட்ட அறநெறி பாடசாலைக்கான கட்டடத்தை கையளிக்கும் நிகழ்வு, இந்த மாதம் 11ஆம் திகதி நடைபெற்றது.

ஆறுமுகம் சுதா





## கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை கொரோனா அதி தீவிர சிகிச்சை நிலையத்துக்கு உதவி

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் கொரோனா அதிதீவிர சிகிச்சை நிலையத்துக்கு 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (13) கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏ.எல். எப் ரகுமான் தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் சுகாதாரத்துறை இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பைசால் காசீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, வைத்தியசாலையின் நிர்வாகத்தினரிடம் பொருட்களை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். நிகழ்வில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை திட்டமிடல் வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச். இலாஹி, சிரேஷ்ட வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம் ஹாரிஸ் உட்பட வைத்தியசாலை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நூருல் ஹுதா உமர்





ஈராக்

கொரோனா விடுதியில் தீ:

# 64 பேர் பலி; 100 பேர் காயம்

ஈராக்கில் உள்ள கொரோனா வைரஸ் தனிமைப் படுத்தல் விடுதி ஒன்றில் தீயில் குறைந்தது 64 பேர் பலியானதாக, அந்நாட்டு அரச செய்தி முகவரகமான ஐ.என்.ஏ நேற்றுத் தெரிவித்துள்ளது.

தென் நகரமான நஸிரியாவில் அமைந்துள்ள அல்-ஹுஸைன் போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினமிரவு ஏற்பட்ட

**“ ஒட்சிசன் தாங்கிகள் வெடிப்பே தீக்கு பிரதான காரணம் என சுகாதார இயக்குநரகத்துடன் உள்ள மருத்துவ தகவல் மூலம் ஒன்று தெரிவித்துள்ளது**

தீயில் 100க்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் இருந்ததாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சிவில் பாதுகாப்பு அணிகளால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஒட்சிசன் தாங்கிகள் வெடிப்பே தீக்கு பிரதான காரணம் என சுகாதார இயக்குநரகத்துடன் உள்ள மருத்துவ தகவல் மூலம் ஒன்று தெரிவித்துள்ளது.

மூன்று மாதங்களுக்கு முன்னர் திறக்கப்பட்ட குறித்த விடுதியானது 70 படுக்கைகளைக் கொண்டிருந்தது.

ஐ. அமெரிக்கா

ஹெய்ட்டி ஜனாதிபதி கொலை:

## ‘ஐ. அமெரிக்க தகவல் மூலம் கைது’

ஹெய்ட்டி ஜனாதிபதியின் கொலையில் பங்கெடுத்ததான சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள ஒரு ஹெய்ட்டி - ஐக்கிய அமெரிக்க நபர் ஒருவர், ஐ. அமெரிக்க போதைப்பொருள் அமுலாக்க நிர்வாகத்தின் தகவல் மூலமாக இருந்ததாக, குறித்த நிர்வாக அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொலையை அடுத்து நிர்வாகத்தை குறித்த நபர் தொடர்பு கொண்டதாகவும், அவரை சரணடையுமாறு நிர்வாகம் அறிவுறுத்தியதாக இந்த அதிகாரி மேலும் கூறியுள்ளார்.



சீனா

24 ஆண்டுகளுக்கு முன்னர் அபகரிக்கப்பட்ட

## மகனுடன் இணைந்த நபர்

24 ஆண்டுகள் தேடுதல் ஒன்றுக்குப் பின்னர் தனது மகனுடன் சீன நபர் ஒருவர் இணைந்துள்ளார். அந்தவகையில், இத்தேடலில் சீனா முழுவதும் மோட்டார் சைக்கிளில் 500,000 கிலோ மீற்றருக்கு மேல் குறித்த நபர் பயணித்துள்ளார்.

ஷன்டொங் மாகாணத்திலுள்ள குறித்த நபரின் வீட்டுக்கு முன்னால் இருந்தே ஆட்கடத்தல்காரர்களால் இரண்டு வயதில் குறித்த நபரின் மகன் கடத்தப்பட்டிருந்தார்.



சுவிற்ஸர்லாந்து

உலக சுகாதார ஸ்தாபனத்தால்

## கொரோனா தடுப்பூசிகளைக் கலக்க எச்சரிக்கை

வெவ்வேறான தயாரிப்பாளர்களிடமிருந்தான கொரோனா தடுப்பு மருந்துகளை கலப்பதற்கு எதிராக உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதான விஞ்ஞானி சௌமியா சுவாமிநாதன் நேற்று முன்தினம் எச்சரித்துள்ளார்.

இவ்வாறு செய்வதால் ஏற்படும் தாக்கம் குறித்து குறைந்தளவு தரவே இருப்பதால் இது அபாயகரமானது என சுவாமிநாதன் குறிப்பிட்டுள்ளார்.



நேபாளம்

கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை

## நியமித்த நீதிமன்றம்

நேபாளத்தின் தற்காலிகப் பிரதமர் கே.பி ஷர்மா ஒளியால் இவ்வாண்டு மே மாதம் கலைக்கப்பட்ட பாராளுமன்றத்தை மீள நியமிக்க அந்நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, ஷர்மா ஒளியின் வைரியான ஷேர் பஹதுர் டெயுபாவை பிரதமராக நியமிக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஏழு நாள்களுக்குள் பாராளுமன்றத்தை மீளக் கூடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக நீதிமன்ற அதிகாரி தேபேந்திர தகல் கூறியுள்ளார்.

தவிர, இரண்டு நாள்களுக்குள் டெயுபாவை பிரதமராக நியமிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளதாக தகல் தெரிவித்துள்ளார்.

**“ இரண்டு நாள்களுக்குள் டெயுபாவை பிரதமராக நியமிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளதாக தகல் தெரிவித்துள்ளார்**



அவுஸ்திரேலியாவுக்கு எதிரான

# தொடரைக் கைப்பற்றியது மேற்கிந்தியத் தீவுகள்

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டித் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் கைப்பற்றியுள்ளது.



ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் ஏற்கெனவே வென்றிருந்த மேற்கிந்தியத் தீவுகள், செனா. லூசியாவில் நேற்றுக் காலை நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் இரண்டு போட்டிகள் இருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியுள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அவுஸ்திரேலியா

அவுஸ்திரேலியா: 141/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மொய்ஸஸ் ஹென்றிக்கஸ் 33 (29), ஆரோன் பின்ஞ் 30 (31), அஸ்தன் தேணர் 24 (22), மத்தியூ வேட் 23 (16), அலெக்ஸ் காரி 13 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர் 2/18 [4], டுவைன் பிராவோ 1/17 [3], பேபியன் அலன் 1/26 [4], ஒபெட் மக்கோய் 1/9 [1], ஷெல்டன் கோட்ரல் 0/32 [4])

மேற்கிந்தியத் தீவுகள்: 142/4 (14.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: கிறிஸ் கெய்ல் 67 (38), நிக்கலஸ் பூரான் ஆ.இ 32 (27), லெண்டில் சிமொன்ஸ் 15 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: மிற்செல் ஸ்டார்க் 1/15 [4])

போட்டியின் நாயகன்: கிறிஸ் கெய்ல்

இரண்டு அணிகளுக்கும் இடையிலான நான்காவது போட்டியானது செனா. லூசியாவில் இலங்கை நேரப்படி நாளை அதிகாலை 5.00 மணிக்கு நடைபெறவுள்ளது.



லக்கி விளையாட்டுக் கழகத்தின்

## கிரிக்கெட் அணிக்கான சீருடை அறிமுகம்

■ பைஷல் இஸ்மாயில்

லக்கி விளையாட்டுக் கழகத்தின் கடின பந்து கிரிக்கெட் அணிக்கான புதிய சீருடை அறிமுக நிகழ்வு, அட்டாளைச்சேனை பரா சொப்பிங் மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

லக்கி விளையாட்டுக் கழகத்தின் தலைவரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எஸ்.எம். அறூஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் வை.எல். நியாஸ், மக்கள் காங்கிரஸ் ஒலுவில் அமைப்பாளர் எம்.ஜே.எம். அஸ்ஹர், லக்கி விளையாட்டுக் கழகத்தின் முன்னாள் தலைவர் ஏ.எச்எம். கியாஸ் ஆசிரியர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் புதிய சீருடைகளை அறிமுகம் செய்து வைத்ததுடன் லக்கி விளையாட்டுக்கழகத்தின் சகல வீரர்களுக்கும் புதிய சீருடையை வழங்கி வைத்தார்.



## இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளராக மஹாநாம?

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக மிக்கி ஆர்தரைப் பிரதியீடு செய்வதற்காக, இலங்கையணியின் முன்னாள் தலைவர் ரொஷான் மஹாநாம கருத்திற் கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



ஆர்தரின் இரண்டாண்டு பதவிக் காலமானது இவ்வாண்டு டிசெம்பர் மாதத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 19 வயதுக்குட்பட்டோர் அணியுடன் ஆலோசகராகப் பணியாற்றுவதற்காக இலங்கையணியின் இன்னொரு முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தன கருத்திற் கொள்ளப்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், 19 வயதுக்குட்பட்ட அணியின் அல்லது ஏ அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவிக்கு இலங்கையணியின் முன்னாள் வீரரான அவிஷ்க குணவர்தன கருத்திற் கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அத்லெட்டிகோவில் இணைந்த டீ போல்

இத்தாலிய சீரி ஏ கழகமான உடினீஸின் மத்தியகள வீரரான றொட்றிகோ டீ போலை ஸ்பானிய லா லிகா கழகமான அத்லெட்டிகோ மட்ரிட் கைச்சாத்திட்டுள்ளது.

ஐந்தாண்டு ஒப்பந்தம் ஒன்றில் 27 வயதான டீ போல் அத்லெட்டிகோவில் இணைந்துள்ளதாக அக்கழகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், டீ போல் ஒப்பந்தம் செய்யப்பட்ட நிதி விவரங்கள் எவையையும் இரண்டு கழகங்களும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.



## றியல் மட்ரிட்டுக்குச் செல்லும் லெவன்டோ ?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான றொபேர்ட் லெவன்டோஸ்கி, ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட்டுக்குச் செல்வதை இலக்காகக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

பயேர்ண் மியூனிச்சுடன் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு வரையில் ஒப்பந்தத்தை 32 வயதான லெவன்டோஸ்கி கொண்டுள்ள நிலையில், அடுத்தாண்டு கழகத்தை விட்டு வெளியேற லெவன்டோஸ்கி கோருவார் என அக்கழகம் எதிர்பார்க்கின்றது.

கடந்த புண்டெலிஸ்கா பருவகாலத்தில் 41 கோல்களை லெவன்டோஸ்கி பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 14 ஜூலை 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.